பக்கங்கள்:- பன்னிரண்டு | Registered as a News paper in Sri Lanka | விலை ரூபா. 6.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
## The Valampuri

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி 30 | வெள்ளிக்கிழமை (13.06.2003) | தொலைபேசி ~ 2223378 | ஒலி 176

# இடைக்கால சபையை வழங்க முன் சர்வகட்சி மாநாடு கூட்டப்படும்

## பிரதமர் ரணில் தீவிர முயற்சி

(நமது சிறப்பு நிருபர்)

**தமிழீழ விடுதலைப்புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கு தீவிரமாக ஆலோசித்து வருவதாக அவருடன் நெருங்கிய அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை உருவாக்கவும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் அதிகாரமுடைய இடைக்கால நிர்வாக கட்டமைப்பொன்றை ஒப்படைக்குமாறுகோரி சமாதான முயற்சிகளில் இருந்து தற்காலிகமாக விலகி இருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளை திருப்திப்படுத்தும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் முன் வைக்கப்பட்ட மாற்று யோசனைகளை விடுதலைப்புலிகள் நிராகரித் திருப்பதை அடுத்து பிரதமர் சர்வகட்சி மாநாடு ஒன்றை கூட்டுவதற்கு தீவிரமாக சிந்தித்து வருகிறார்.

பிரதமர் ரணிலால் கூட்டப்படவிருக்கும் இநத சர்வகட்சி மாநாட்டில் முதற்கட்டமாகப் பாராளுமன்றத்தில்

(12ம் பக்கம் பார்க்க)

## மருதனார் மடத்தில் வாள்வெட்டு
## வரதர் அணி உறுப்பினர் ஒரு கையை இழந்தார்

(ஏழாலை)

முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களின் வாள் வெட்டுக்கு இலக்காகி ஒரு கை துண்டிக்கப்பட்ட நிலையிலும் மற்றைய கை தொங்கிய நிலையிலும் யாழ் போதனா வைத்தியசாலையின் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 4 மணியளவில் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை இடம் பெயர்ந்தோர் நலன்புரி முகாமிற்கு அருகில் இச்சம்பவம் இடம் பெற்றது.

சம்பவத்தில் நாகப்பன் என அழைக்கப்படும் மூன்று பிள்ளைகளின் தந்தையான நாகமுத்து நாகேந்திரன் (வயது38) என்பவரே வாள் வெட்டுக்கு இலக்கானவராவார்.

சம்பவத்தையடுத்து ஸ்தலத்திற்கு சென்ற பொலிஸார் அவரை மீட்டு யாழ் போதனா வைத்தியசாலை

(12ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத்தலைவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(நமது நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலங்களாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் திட்ஜ்வே காலக்சன் இன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெறவுள்ள இந்த விசேட சந்திப்பின் போது தமிழ் இயக்க உறுப்பினர்கள் படுகொலை செய்யப்படுவது சம்மந்தமாக ஆராயப்படவுள்ளதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அகரிஸ் பிறக்கொட்டி தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் பொலிஸ் உத்தி

(12ம் பக்கம் பார்க்க)

## டோக்கியோ மாநாட்டு பிரகடனம் புலிகளுக்கு "பக்ஸ்" மூலம் அனுப்பிவைப்பு
### ஜப்பான் தூதுவர் அகாஸி வன்னி செல்வதில் தாமதம்

(கொழும்பு)

டோக்கியோவில் நடந்து முடிந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் பிரகடனப் பிரதியை ஜப்பான் விசேட தூதுவர் யசூஸி அகாஸி பக்ஸ் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

டோக்கியோவில் கடந்த 9ஆம், 10ஆம் திகதிகளில் 50 நாடுகள் கலந்துகொண்ட இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அறிவித்திருந்த இலங்கையின் அரசமைப்பிற்கு உட்பட்ட வகையிலான தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு இலங்கை அரசின் பழைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்து, அதனை நிராகரித்த நிலையில் டோக்கியோ பிரகடனத்தை ஜப்பானிய விசேட தூதுவர் யசூஸி அகாஸியினால் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றிய இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூஸி அகாஸி நேற்று கொழும்பு திரும்பியுள்ள போதும் உடனடியாக வன்னிக்குச் செல்வது சாத்தியம் இல்லாததால் டோக்கியோ மாநாட்டின் பிரகடனப் பிரதியை நேற்று விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை தூதுவர் யசூஸி அகாஸி முன்னர் எதிர்பார்க்கப்பட்டது போல லண்டன் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து பேசமாட்டார் என்றும் தெரியவருகிறது.

(வ)

## புளொட் மோகனே பிஸ்ரல் குழுவின் இலக்கு
### விசாரணைகளில் தகவல்

(கொழும்பு)

செவ்வாயன்று தெஹிவளைப் பாலத்தருகே கைது செய்யப்பட்ட பிஸ்ரல் குழு சந்தேக நபர்கள் இருவரும், இராணுவப் புலனாய்வுப் பிரிவில் செயற்படும் புளொட மோகன் என்பவரைக் குறிவைத் திருந்தனர் என்று விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த இருவரும் பிரயாணம் செய்த முச்சக்கர வண்டியில் பல்வேறு தோற்றங்களிலான புளொட் மோகனின் படங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் வசம் ஒரு பிஸ்டலும் 15 ரவைகளும் இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புளொட் மோகன் தினமும் காலையில் உடற்பயிற்சிக்காக தெஹிவளைக் கடற்கரைக்குச் செல்வது வழக்கம் கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த விமலராஜா எனவும், சுன்னாகத்தைச் சேர்ந்த நித்தியானந்தன் எனவும் அடை

(12ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் நாடு திரும்பினார்

(கொழும்பு)

டோக்கியோ மாநாட்டுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் சென்றிருந்த குழு நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் உயர் அதிகாரிகள் நாடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை அமைச்சாகள மிலிந்தமொறகொட, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் இன்னமும் நாடு திரும்பவில்லை இவர்கள் லண்டன் சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## அமைச்சர் மகேஸ்வரனைச் சந்திக்க களுத்துறைக் கைதிகள் விருப்பம்

(கொழும்பு)

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனை தாம் சந்திக்க விரும்புவதாக களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் கடிதமூலம் கோரியுள்ளனர்.

அமைச்சர் மகேஸ்வரனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர்கள் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

கடந்த மாத நடுப்பகுதியில் சிறைச்சாலையில் புதிய ஆணையாளர் நாயகம் றூமி மர்சூன் என்பவர் எம்மைச் சந்தித்து பேசியபோது 6 முதல் 9 வருடங்களாக உறவுகளை காணமுடியாது உள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சிறைக்கைதிகளை விமானம் மூலம் அழைத்துச் சென்று உறவுகளை காண ஏற்பாடு செய்து தருவதாக தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து 20 பேர் யாழ்ப்பாணம் செல்வதற்கும் 10 பேர் வவுனியா மற்றும் மன்னார் செல்ல விண்ணப்பித்துள்ளனர். எனினும் இதுவரையும் இது தொடர்பான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை யாழ். திருநெல்வேலியைச் சேர்ந்த சதாசிவம் நிமலக்குமார் (வயது 28) என்பவருக்கு பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றம் 5 வருட சிறைத் தண்டனையை கடந்த 6ம் திகதி வழங்கியுள்ளது. இதனால் கைதிகளிடையே பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது என அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-10)

## வாழைச்சேனையில் நேற்று கிரனைட் வீச்சு
### நான்கு முஸ்லிம்கள் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனையில் உள்ள தேநீர்க்கடை ஒன்றின் மீது நேற்று மாலை 6.30மணியளவில் இனந்தெரியாதோர் கிரனைட் வீசியதில் நான்கு முஸ்லிம்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

இக் கிரனைட் வீச்சு சம்பவம் குறித்து மட்டக்களப்பு பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

(ந-5)

# வேலணை பிரதேச சபை மீள் கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான மீள் கேள்விகள் எமது சபையால் கோரப்படுகின்றது.

| இல | வேலை விபரம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கப்படக் கூடியது) | கேள்வி பத்திரப் பணம் (மீளளிக்கப்பட மாட்டாது) |
|---|---|---|---|
| 01 | சங்கத்தானை கோயில் வீதி, புங்குடுதீவு | 3600/= | 360/= |
| 02 | குடலைப்பே வீதி, நயினாதீவு, | 2400/= | 240/= |
| 03 | வங்களாவடி வீதி, நயினாதீவு | 4440/= | 345/= |
| 04 | மொங்கானைப்புலம் வீதி, திருவள்ளுவர் வீதி சரவணை மேற்கு | 8000/= | 800/= |
| 05 | முகப்பு வயல் கந்தசாமி கோயில் வீதி | 8400/= | 840/= |
| 06 | உதயசூரியன் சனசமூக நிலையத்திருத்தம் மண்டைதீவு | 2500/= | 250/= |
| 07 | பாரதி சனசமூக நிலையத்திருத்தம் சரவணை | 2700/= | 270/= |

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

1. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரைப்படுத்தல் திட்டத்தின் கீழ் எம் 09 உம் அதற்கு மேற்பட்ட தரம் ஒன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
2. இலங்கைத் தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தில் (இ.தே.ஒ.ச) உறுப்பினராக அல்லது எமது சபையில் பதிவு செய்யப்பட்டோரே கேள்வி கோரலாம்.
3. கடந்த 5 வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களை திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த 5 வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையை கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடம் இருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவு அளிக்கப்படவேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரல் ஒன்றை வழங்குமாறு கேள்வியிடுவோர் வேண்டப்படுகின்றனர்.
4. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய அளவு கூறுவிலை ஆற்றலளவைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
5. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்திறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.
6. கேள்விப் பத்திர ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதிப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

அ. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விக்காரர் மேலதிக தகவல்களை கேள்விப்படிவத்தில் பெறமுடியும் என்பதுடன் கேள்விப்படிவங்களினை 17.06.2003 திகதி தொடக்கம் 04.07.2003 ஆம் திகதி நண்பகல் 12மணி வரை அட்டவணையில் உள்ள தொகையினைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. கேள்விப் பத்திரங்களின் இரு பிரதிகள் கடித உறையில் இட்டு அரக்கு முத்திரை இட்டு ''செயலாளர் வேலணை பிரதேச சபை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது தலைமை அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியிலோ 07.07.2003ம் திகதி நண்பகல் 12மணிக்கு முன்பாக சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலை விபரத்தினை எழுதல் வேண்டும்.

இ. கேள்விகள் 07.07.2003ம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு திறக்கப்படும். அச் சமயம் கேள்வி சமர்ப்பித்தோர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.


ஈ. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.

உ. மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. கூறுவிலை தயாரிப்புக்கு அல்லது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**செல்லப்பா சண்முகராசா (ஜே.பி)**
**வேலணைப் பிரதேச சபை**

(C/6281)







கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலய மண்டபத்தில், அண்மையில் இடம்பெற்ற ஜீ.ரி.சற் நிறுவன வீட்டுத் திட்டப் பணியாளர்களின் பாராட்டு விழாவில் யாழ். பிரதேச செயலக உதவித் திட்டமிடல் உத்தியோகத்தர் எஸ்.மகேஸ்வரன் மற்றும் யாழ். மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு குரு முதல்வர் சாள்ஸ் கொலின்ஸ் அடிகள் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், ஜீ.ரி.சற் திட்டப் பணிப்பாளர் எஸ்.பரராஜசேகரம் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், பயனாளிகளுடன் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்கள் மற்றும் ஜீ.ரி.சற் பணிப்பாளர் ஆகியோர் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். படங்கள்: ஜி.ஜெஸ்ரின்

## மாகாணக் கல்வி அமைச்சில் மோசடி மேலதிக கல்விப் பணிப்பாளர் இடைநிறுத்தம்

(கொழும்பு)

மத்திய மாகாண கல்வி அமைச்சில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி குறித்து மேலதிக கல்விப் பணிப்பாளர் ஒருவர் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் உட்பட 7 பேர் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பண்டார எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண கல்வி அமைச்சில் செயலமர்வுகள் கருத்தரங்குகள் என்பவற்றை நடத்தியதாகக் கூறி பல அதிகாரிகள் இந்நிதி மோசடியில் ஈடுபட்டதாகத் தெரியவந்ததை அடுத்து,

குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இந்த இடை நிறுத்தங்கள் இடம்பெற்றுள்ளன. (தி)

## ஓமானும் உதவி

(கொழும்பு)

தென்னிலங்கையில் கடந்த மாதம ஏற்பட்ட வெள்ளத்தால், பாதிப்புற்ற மக்களுக்கு ஓமான் அரசு 500 மில்லியன் பெறுமதியான நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளது.

நிவாரணப் பொருட்களின் முதல் தொகுதி ஓமானில் இருந்து விசேட விமானம் மூலம் நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது. (உ-10)


## தரம் 10 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மூத்த எழுத்தாளர்
**அமரர் கே. டானியல்** ஞாபகார்த்தமாக

கட்டுரையின் தலைப்பு
**தொலைக்காட்சியும்மாணவர்களும்**

போட்டியின் விதிகள்:
தரம் பத்தில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரை 200தொடக்கம் 225சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.06.2003ற்கு முன்னதாக "மாணவர் கட்டுரைப் போட்டி" வலம்புரி, 15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**
**கட்டுரைப்போட்டி இல-5**


மாணவர் பெயர்: ........................
பாடசாலை முகவரி: ........................
........................
கற்கும் தரம்: ........................


உறுதிப்படுத்துகிறேன்

........................
ஆசிரியர்.

# கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள்

# திருக்கோயில் இரதோற்சவ விழா சிறப்புமலர் - 13. 06. 2003





தில்லையம்பதியாள் துணை

அன்னை பராசக்தி ஓம் சக்தி ஓம்
ஆதி சிவசக்தி ஓம் சக்தி ஓம்
இம்மை நலம் தந்தாள் ஓம் சக்தி ஓம்
ஈந்தவருக்கு அருள்வாள் ஓம் சக்தி ஓம்
உமையவள் திரிசூலி ஓம் சக்தி ஓம்
ஊழித் தவக்காளி ஓம் சக்தி ஓம்
எம்மையும் ஆட்கொண்டாள் ஓம் சக்தி ஓம்
ஏற்றங்கள் அருள்வாள் ஓம் சக்தி ஓம்
ஐஸ்வரிய பூரணி ஓம் சக்தி ஓம்
ஒருமையில் ஓங்கும் ஓம் சக்தி ஓம்
ஓங்காரி பைரவி ஓம் சக்தி ஓம்
ஔவியம் தீர்த்தாள் ஓம் சக்தி ஓம்
ஆனந்தம் சேர்த்தாள் ஓம் சக்தி ஓம்
பர்வதக் குமரி ஓம் சக்தி ஓம்
பார்வையில் அருள்வாள் ஓம் சக்தி ஓம்
சிவகாமித் தாயே ஓம் சக்தி ஓம்
மேல் நிலையருள்வாள் ஓம் சக்தி ஓம்

## தில்லையம் பதியாள் மகத்துவம்

தில்லையம்பதியில் 135 ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்ற பேச்சியம்மன் கோயில் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம் பொருள். ஆன்மாக்களை உய்வித்தற் பொருட்டு எழுந்தருளி யிருக்கும் இடமே திருக்கோயில் ஆகும். யாழ். நகரின் வடபால் 3 மைல் தொலைவில் இருக்கும் மாண்பான தெய்வீக மாட்சி நிறைந்த தலமான கோண்டாவில் தில்லையம் பதியில் இற்றைக்கு 135 ஆண்டுகளுக்கு முன் திருக்கோயில் தோற்றம் பெற்றது.

அன்னை பராசக்தி ஆரம்பத்தில் மாமர நிழல்தனில் சிறு கொட்டகையில் பேச்சியம்மன் எனும் பெயருடனும் பின் சிவகாமியாகவும் தோற்றம்பெற்று எழுந்தருளியிருந்து அருள்பாலித்தாள். அக்காலத்தில் இவ்வூரைச் சேர்ந்த வேலன் என்பவரே விளக்கேற்றி பூசை வழிபாடுகளைச் செய்துவந்தார். வேலனைத் தொடர்ந்து கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சைவப் பெரியார் சரவணமுத்து சபாவதி மார்க்கண்டேயரும், அவரது குடும்பத்தினரும் அம்பாளின் நித்தியகருமங்கள் அனைத்தையும் சிறப்புறச் செய்து வந்தார்கள். இவர்களின் காலத்தில் வைகாசி விசாகத் தினத்தில் அம்பாளிற்குப் பொங்கல், மடை வைப்பதுடன், ஆடு, கோழி என்பவற்றைப் பலிகொடுத்து விழாவைக் கொண்டாடினர். 1959 இல் இவ்வூரைச் சேர்ந்த திருத்தொண்டர் அமரர் வீரகத்தி தம்பியையாவின் பெருமனதால் தர்ம பரிபாலன சபை உருவாக்கப்பட்டு, திருக்கோயிலைப் பொறுப்பேற்று காலையும் மாலையும் இருநேரப் பூசை வழிபாடுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, இவரே நித்திய பூசை செய்துவந்தார். இக்காலத்திலேயே பலியிடுதல், மடைபோடுதல் என்பன நிறுத்தப்பட்டு, திருக்கோயிலின் புறச்சூழலில் உள்ள சூளை மேடுகள் அகற்றப்பட்டு, அம்பாளின் திருக்கோயிலுக்கென விஸ்தீரணம் கொண்ட இடம் ஒதுக்கப்பட்டதுடன், 1962 ஆம் ஆண்டு அன்னையின் அருட்கடாட்சத்தினால் திரண்ட மக்கள் ஒன்றுகூடி, சிறப்பான திருப்பெருங் கோயிலை அமைப்பதற்காக பாலஸ்தாபனம் செய்தனர். இத் திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் நிறைவாகி, 1965 ஆம் ஆண்டு ஆனி மாதம் சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் அவர்களினால் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடத்தப்பட்டதுடன், பேச்சியம்மனாக அடியார்களிற்கு அருள்பாலித்த அன்னைக்கு சிவகாமி அம்பாள் எனும் திருநாமம் சூட்டப்பெற்றது. 1966 இல் அம்பாளுக்கு வைகாசி விசாகத் தினத்தை முன்னிட்டு பத்துத் தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்தது. அம்பாளின் திருவருள் பாலிக்க மேலும் ரிசபம், பலிபீடம், கொடித்தம்பம், வசந்தமண்டபம், மணிக்கோபுரம், வைரவர், சித்திரத்தேர், திருமஞ்சனக்கிணறு முதலான திருப்பணி வேலைகள் நிறைவேற்றப்பட்டு 1976 ஆம் ஆண்டில் மகோற்சவம் ஆரம்பமாகியது. மகோற்சவ காலத்தில் வேட்டைத்திருவிழா அன்று மாலை வேளையில் குதிரை வாகனத்தில் அம்பாள் ஞானவைரவர் சுவாமி கோயிலுக்குச் சென்று, பரிவேட்டை ஆடுவதும் இரவு சப்பறத்திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் வைகாசிப் பௌர்ணமியில் தீர்த்த உற்சவமும் நடைபெறுவது வழக்கமாகியது.

1977 இல் அம்பாள் திருவூஞ்சற் காப்பு சுட்டி புரத்தில் இசை மாமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்களால் பாடப்பட்ட சிறப்புடையது . திருக்கோயில் வாயிலின் தல விருட்சமாகக் காணப்படும் ஆலும் அரசும் ஒன்றிணைந்த அருள்மிகு பொந்தின்ஊடாக அம்பாளின் விமானத்தில் உள்ள கலசத்தைக் காணக்கூடியதாக உள்ளது. இது அற்புதமானதொன்றாகும்.

அம்பாளின் மூர்த்திகரம் மேலும் பிரவாகிக்க 1982 இல் மீண்டும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு யாழ்ப்பாணம் அரச அதிபராக இருந்த திரு. யோகேந்திரா துரைச்சாமி அவர்களால் தைப்பூசத் தினத்தன்று அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டன. இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட சிறந்த சிற்பாச்சாரியர்களால் இரட்டைப் பஞ்சாங்க முறைப்படி கலையம்சம் பொருந்திய துவிதள விமானக் கோபுரம் அமைக்கப்பட்டது. ஈழத்தாயான சிவகாமி அம்பாள் திருவுருவத்தை நிர்மாணித்த தென்னிந்திய சிற்பவல்லுநர் திரு. பெரிய சாமி ஆச்சாரியாருக்கு அம்பாளின் விக்கிரக வேலையே கடைசி வேலையாக அமைந்தது. இத்தோடு அவர் இறைவனடி சேர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மூலமூர்த்தியான சிவகாமி அம்பாள் வள்ளி, தெய்வானை சமேத ஸ்ரீ முருகப்பெருமான், ஸ்ரீ வைரவப் பெருமான் என்பன இந்தியாவில் இருந்து 02.10.1987 விஜயதசமி தினத்தன்று இங்குவந்து சேர்ந்தன. விநாயகப்பெருமான், வள்ளி, தெய்வானை சமேத ஸ்ரீமுருகப் பெருமான், நாகதம்பிரான், சந்தானகோபாலர், நர்த்தன கணபதி, மகேஸ்வரி, வைஷ்ணவி, பிராமகி, துர்க்கை, சண்டேஸ்வரி ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு ஆகம முறைப்படி தனித்தனிக் கோயில்களும் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு கனகசபையும் அமைக்கப்பட்டதுடன், மூலமூர்த்தியான சிவகாமியம்பாளின் விக்கிரகமும் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்டு, 1989 ஆம் ஆண்டு சிவஸ்ரீ க. குகதாஸக் குருக்கள் தலைமையில் பங்குனி உத்தரப் பௌர்ணமி நிறைநாளில் மகாகும்பாபிஷேகம் அம்பாளின் அருட்கடாட்சத்தினால் சிறப்புற நடைபெற்றது.

காஞ்சிப் பெரியாரின் அருளாசியுடனும் ஈழத்து அருளாளர்களின் நல்லாசியுடனும் இந்தியாவின் புனித கங்கைத் தீர்த்தம் இம்மகா கும்பாபிஷேகத்திற்கு பயன்படுத்தப்பட்டது ஒரு சிறப்பாகும். இந்த நன்நாளில் அம்பாளின் கோயில் சுற்றாடலுக்கு தென்னிந்தியாவைச் சேர்ந்த பெரியசாமி ஆச்சாரியார் அவர்களின் ஆசியுடன் தில்லையம் பதியென்னும் திருநாமம் சூட்டப்பட்டது. தினமும் காலை, மதியம், மாலை பூசை வழிபாடு நடைபெறவும் அம்பாளின் அருட்கடாட்சம் கிட்டியது. 1990 ஆம் ஆண்டு திருக்கோயில் வருடாந்த சங்காபிஷேகத் தினத்தன்று காசியில் இருந்து காசி விஸ்வநாதர் (லிங்கம்) இங்கு கொண்டுவரவழைக்கப்பட்டது. 1992 பங்குனி உத்தரத்தை முன்னிட்டு 10 தினங்கள் இலட்ச அர்ச்சனை ஆரம்பமாகியது. பங்குனி உத்தர சங்காபிஷேகம், மகோற்சவ வேட்டைத் திருவிழா, நவராத்திரி, விஜய தசமி, மானம்பு ஆகிய தினங்களில் அம்பாள் பழைய தெருவீதியுலா தரிசனம் தருவது வழக்கமாகும். 1993 ஆம் ஆண்டு தை மாதம் காசி விசாலாட்சி சமேத விஸ்வநாதருக்கு பிரதிஸ்டா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பங்குனி உத்தர சங்காபிஷேகத்தின் போது அம்பாளின் கடாட்சத்தினாலும் அடியார்களின் பெரும் காணிக்கையினாலும் அம்பாளுக்கு பொன் முடியும், திருக்கோரண சூட்டு விழாவும் கொண்டாடப்பட்டது.

கவிமாமணி ந.வீரமணிஜயர் அவர்களால் எழுதப்பட்டு தென்னிந்திய பக்திப் பாடகர் கலைமாமணி ரி.எம். சௌந்தரராஜன் அவர்களால் பாடப்பட்ட திருவூஞ்சல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டுவிழா 20.05.1994 வைகாசி வசந்த உற்சவத்தன்று ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசியுடன் வெளியிடப்பட்டது. 10.06.1995 அன்று அம்பாளுக்கென அமைக்கப்பட்ட புதிய சப்பறம் வெள்ளோட்டவிழா நடைபெற்றது. 21.05.1997 இல் இரண்டாவது பக்திப் பாமாலை ஒலிப்பதிவு நாடா வெளியிடப்பட்டது. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீ சக்கரம் 10.04.1998 பங்குனி உத்தரத்தினத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

08.05.2000 ஆம் ஆண்டு 25 வது கொடியேற்றத்தை முன்னிட்டு அடியார்களின் பெருங் காணிக்கையினால் அம்பாளுக்கு தங்கக் குடை சூட்டு விழாவும் இராஜகோபுரம் அமைப்பதற்கான அங்குரார்ப்பண வைபவமும் நடைபெற்றன. சைவசமய புண்ணிய காலங்கள் சுப வேளை அனைத்திலும் அம்பாளுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. எந்நாளும் அம்பாள் புதுப் பொலிவுடன் தில்லையம்பதியில் அடியார்களுக்கு அருளாட்சி செய்கிறாள். இப் புண்ணிய தலத்தை நாடி வருவோர் அனைவரும் நற்கதி அடைவர் என்பது திண்ணம்.

*தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே*
*தொல்லைகள் தீர்ப்பாயம்மா*

*த.ராதா*
*செயலாளர் பரிபாலன சபை,*
*தில்லையம்பதி.*

## அருளாசிச் செய்தி

அகில புவன மாதாவாக விளங்கும் அன்னை சிவகாம சுந்தரிக்கு இன்று தேர்த்திருவிழா. கோண்டாவில் தில்லையம் பதியில் பல்லாண்டு காலமாக ஆன்ம கோடிகளுக்கு அருளமுதம் சொரிந்து கொண்டிருக்கும் தாயானவள், திருமாமர நிழலில் வீற்றிருந்து வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் ஈந்துகொண்டு தாயன்போடு காட்சிதருகின்றாள். "அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லி" இது அபிராமிப்பட்டர் கூற்று. உண்மைதான். இந்த வைகாசி மகோற்சவப் பெருவிழாவில் அன்னையின் ஆனந்தத் திருக்காட்சி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அருள்பொலிவு.

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய பஞ்சகிருத்தியங்களை வெளிப்படையாக்குவதே மகோற்சவம். படைத்தல் - கொடியேற்றம், காத்தல் - வாகனத் திருவிழா, அழித்தல் - வேட்டைத் திருவிழாவும், தேர்த்திருவிழாவும், அருளல் - தீர்த்தத் திருவிழா, மறைத்தல் - மௌனத் திருவிழா இப்படியாக மகோற்சவம் சிறந்து விளங்குகின்றது. இன்று தேரேறி அருளாட்சி செய்யும் சிவகாமி அம்மன் எம்மை ஆண்டு இம்மை மறுமை வினைகளை அழிக்கட்டும். எல்லா வகையிலும் இவ்ஊர் மக்கள் பாக்கியம் செய்தவர்களாகவும் தில்லையம்பதியும், சிவகாமியின் அடியவர்கள் எந்நாளும் இன்புற்று வாழவும் அன்னை திருவருளைப் பொழிவாள். நாமும் எமது கிராமமும் இநத ஊரும் எமது நாடும் செழித்து வாழவும், நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம் நிலவவும் எல்லோரும் ஒன்றுசேர்ந்து தேர் வடம்பிடித்து வீதி வலம் வருவோம். இங்கு வடம்பிடித்து நாம் தேர் இழுத்தால் மேலை வானில் ஓர் இடம் கிடைக்கும்.

வண்ண வண்ண சேலை கட்டி
சின்ன சின்ன முத்துமாலையிட்டு
கண்ணழகி சிவகாமி தில்லைப் பதியில்
சின்னரதம் தானேறி ஒளியோடு வாரீரம்மா.

*"எல்லோரும் இன்புற்று வாழ நினைப்பதெல்லாம் வேறேதும் இல்லை"*

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*
*சுபம்*

மகோற்சவ பிரதம குரு,
**"சிவாகம கிரியா இரத்தினம்"**
**சிவஸ்ரீ சதா. மகேஸ்வரக் குருக்கள்**
*(பிரதம குரு இராஜ இராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள் தேவஸ்தானம். நாயன்மார்க்கட்டு).*

**ஸ்ரீ சிவகாமி தொலைத்தொடர்பு நிலையம்**
தில்லையம்பதி, கோண்டாவில்.
உள்நாடு:- 070 - 212841
வெளிநாடு:- 0094 - 7021 - 2841
உரிமையாளர்:- க.வசந்தகுமரன்

**தில்லையம்பதி மோட்டோர்ஸ்**
236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தில்லையம்பதி தொலைத்தொடர்பு சேவை
கோண்டாவில் சந்தி.
T.P:- 021-222 2488
021-222 3820

**மலராக்கம்:**
**சொ.சதீஸ்வரன்**

**அம்பிகை தொலைத்தொடர்பகம்**
குமரகோட்டம் வீதி,
கோண்டாவில்.
தொ.பே:- 0094 - 070 - 212967
0094 - 021 - 222-5845

புகைப்படத்துறையில் ஓர் முன்னோடி
**குகன் போட்டோ**
தில்லையம்பதி,
கோண்டாவில்.

வீடியோ படப்பிடிப்பில் 22 வருட
அனுபவம் மிக்க
**புலவர் வீடியோ**
தில்லையம்பதி,
கோண்டாவில.

வீடியோ படத்துறையில் தனியிடம் பெற்ற நிறுவனம்
**பாலா வீடியோ**
தில்லையம்பதி,
கோண்டாவில்.

யாழ். நகரில் முன்னணியில் திகழும்
**செந்தூரன் அலங்காரப் பந்தல்**
அரசடி வீதி,
(ஆஸ்பத்திரி முன்பாக)
கோண்டாவில்.

புகைப்படத் துறையில் புதிய பரிணாமம்
**உதயன் போட்டோ**
தில்லையம்பதி,
கோண்டாவில்.

## இன்று ஒரு தகவல்

# உதவிடும் சமாளிப்பு!

சமாளிப்பு என்பது ஒரு தனி சாமர்த்தியம். அது எல்லாருக்கும் சுலபமாக வந்து விடாது! சிலருக்கு அது கைவந்த கலையாக இருக்கும். முக்கியமாகக் கலைஞர் களுக்கு இந்த சாமர்த்தியம் மிகவும் அவசியம். இப்பொழுது வானொலி நாடகங்களை முன்னரே ஒலிப்பதிவு பண்ணி-இசைகளெல்லாம் சேர்த்து அழகு பண்ணி, (ரேப்பில்) நாடாவில் தயாரித்து... தேவையான நேரத்தில் ஒலி பரப்பி விடுகிறார்கள்! முன்னர் இந்த வசதி இல்லை. நேரடியாகவே வசனம் பேசி நடிக்க வேண்டும். அப்படி அது ஒலிபரப்பாகும். தேவைப் படுகின்ற நேரத்தில் இசை , சத்தம் ஆகிய வற்றைத் தனியாக ஒருவர் போட்டுக்கொண்டிருப்பார். கதா நாயகன் கோப்பி ஆற்றுகிறார் என்றால், நிஜயமாகவே ஒருவர் தனியாக ஒரு மைக்கின் முன்னால் கோப்பியையோ, தண் ணியையோ ஆற்றி அந்தச் சத்தத்தை உண்டாக் கிக்கொண்டிருப்பார். இப் பொழுது அந்தச்சத்தத்தைத் தனியாகப் பதிவு செய்து வசனத்தோடு சேர்த்து விடலாம்.

அந்த நாட்களில் இவற்றையெல்லாம் மிகவும் எச்சரிக் கையோடு செய்யவேண்டும். ஏதாவது தப்பாக ஒலிபரப்பு ஆகிவிட்டால் அதைத் திருத்துவதற்கு வழியே இல்லையே! காற்றிலேபோனது போனது தான்! அது மாதிரிச் சமயத்தில் ''சமாளிப்பு'' மிகவும் அவசியம். அந்தக்காலத்தில் அரை மணிநேர நாடகம் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. நேரடியாக ஒலிபரப்பு ஆகிக்கொண்டிருக்கிறது!

டி.கே.சண்முகமும், திரௌபதியும் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு இடத்திலே குழந்தை வீரிட்டு அழவேண் டும். உடனே கணவன் மனைவியைப் பார்த்து, பொறுப் பில்லாமல் குடும்பம் நடத்துவதாக ஏசவேண்டும். இது தான் காட்சி. ஒரு இசைத்தட்டில் ஓசைகள் எல்லாம் பதிவு பண்ணி இருக்கும். அதில் குழந்தை அழுகிற சத்தம், நாய் குரைக்கிற சத்தம், ரயில் போகிற சத்தம், பூனை கத்துகிற சத்தம் இப்படி நிறைய இருக்கும். அதில் குழந்தை அழுகின்ற சத்தத்தை ஒருவர் அந்த நேரத்தில் போட வேண்டும். அந்த இசைத்தட்டில் அது இரண்டாவது விடயம். ஆனால் அந்த ஆள் தவறுதலாக மூன்றாவது விடயத் தைப்போட்டு விட்டார். என்ன ஆயிற்று தெரியுமா குழந்தை அழுவதற்குப் பதிலாக நாய் குரைக்க ஆரம்பித்து விட்டது. எல்லாரும் பதறிப்போய் விட்டார்கள். என்ன பண்ணுவது என்று புரியவில்லை.

அப்பொழுது நாடகத் தயாரிப்பாளராகவிருந்த பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் திகைத்துப்போய் டி.கே. சண்முகத் தைப் பரிதாபமாகப் பார்த்தார். டி.கே. சண்முகம் கொஞ்சம் கூடப் பதற்றம் அடையாமல் ''ஏண்டி ! வாழ்கிற வீட்டில் இப்படி நாயைக்கொண்டு வந்துவளர்க்கவேண்டாம் என்று எத்தனை தடவை நான் சொல்வது? குழந்தை அழுகிற சத்தத்தையும் கூட நாய்ச்சத்தம் அடக்கி விட்டது பார்த்தாயா?'' என்றார். ஒலிபரப்பு அறைக்குள்ளே நடந்த ஒரு தவறு வெளி உல கத்துக்குத் தெரியாமல் போய்விட்டது. இதற் குக்காரணம் அந்தக் கலைஞருடைய புத்திசாலித் தனமான சமாளிப்பு.

இதேமாதிரித்தான் 1959லே ஒரு வரலாற்று நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. ''இளவரசர் போரிலே வெற்றி பெற்று வந்து கொண்டிருக்கிறார்'' என்று சொல்லவேண்டியவர் மைக்கின் முன் வந்தார். ''அரசே! இளவரசர் தோற்றுப்போய் வந்து கொண்டிருக்கிறார்'' என்று தப்பாகச்சொல்லி விட் டார். நாடகத்தயாரிப்பாளர் எஸ். கந்தசாமி-துறைவன் இதைக்கேட்டவுடனே எழுந்து மைக்கின் முன் வந்து நின்றார். 'இள வரசர் தோற்கவில்லை. வெற்றிவாகை சூடி விரைந்து இங்கு வந்து கொண்டிருக்கிறார். எதிரியின் ஒற்றன் இவன்! பொய் சொல்லி ஓடப்பார்க்கிறான்! இவனுக்கு சரியான தண்டனை கொடுக்கவேண்டும்'' என்று சொல்லி விட்டு அடிக்க ஆரம்பித்து விட்டார். அதனால் நாடகம் அடிபட்டுப் போகாமல் ஒலிபரப்பாகி விட்டது.

இது மாதிரியான சாமர்த்தியமான சமாளிப்புக்கள் பெரிய தவறுகளையெல்லாம் வெளியே தெரியாமல் காப்பாற்று வதற்கு உதவியாக இருக்கின்றன.

ஒரு மேடை நாடகம் கலைவாணர் என் .எஸ். கிருஷ்ணன் நடித்துக் கொண்டிருக்கிறார். அவர் இன்னொருவரைப் பார்த்து வசனம் பேசுகிறார். ''அடிக்கிற அடியிலே பற்கள் முப்பத்தொன்றும் உடைந்து விடும்'' என்று சொல்லி விட் டார். அவருடன் நடித்துக்கொண்டிருந்தவர் ''ஒரு பல்லை விட்டு விட்டீர்களே!'' என்றார். கலைவாணர் பார்த்தார். ''அந்த ஒரு பல்லில் பல்வலி வந்து நீ சாகவேண்டும். அதற் காக விட்டு வைத்திருக்கிறேன'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# முஸ்லிம் விவகாரத்தில் முக்கிய கவனம் செலுத்துமாறு சர்வதேசம் வலியுறுத்து

## நாடு திரும்பிய ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் அபிலாசை களைக் கவனத்தில் கொண்டு சமா தான பேச்சு வார்த்தைகளை முன் னெடுத்துச் செல்லுமாறு அரசாங் கத்தையும் தழிழீழ விடுதலைப் புலிகளையும் சர்வதேச சமூகம் வலி யுறுத்தியுள்ளது.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் டோக்கியோ மாநாட்டை முடித்துக் கொண்டு நேற்று முன் தினம் நாடு திரும்பிய போது தெரி வித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில, நிரந்தரத்தீர்வு காணப்படவேண்டும் என அம்மாநாட்டில் சர்வதேச சமூகம் இருதரப்பினரையும் வலியுறுத்தி யுள்ளது.

எந்தவொரு அரசாங்கத்தினதும் ஆட்சியில் இவ்வாதவாறு இவ் அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு பெருமளவு நிதி கிடைத் துள்ளது.

இதற்கு அரசினாலும் விடுதலைப் புலிகளினாலும் கடந்த ஒன்றரை வருடங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் யுத்த நிறுத்தமே காரணமாகும்.

இம்மாநாட்டில் பெருமளவு நிதி கிடைத்துள்ளது என்பதை விட, சமாதானப்பேச்சுக்களில் முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாக பங்கு



பற்றுவது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க விடுத்த அறிவிப்பே முக்கியமானது.

கடந்தகாலப் பேச்சுவார்த்தை களில் அரச தரப்பு பிரதிநிதியாக நான் கலந்து கொண்டபடியால், முஸ்லிம் மக்களின் அபிலாசைகள், பிரச்சினைகள் அவர்களின் சேவை கள் குறித்து வலியுறுத்த முடியாது இருந்தது.

ஆனால் , இனித்தொடரப் போகும் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளும் பூரணப் படுத்தப்படும் என தெரிவித்துள் ளார். (தி)

# போதைப்பொருள் பாவனைக்கு நாளாந்தம் 5 கோடி செலவு

(கொழும்பு)

இலங்கையில் ஹெரோயின் போதைப்பொருள் பாவனைக்காக நாளந்தம் 5கோடி ரூபா செலவிடப் படுவதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப்பணியகம் தெரி வித்துள்ளது.

இது தொடர்பாக பணியகம் விடுத்துள்ள அறிக்கையில், இப் பழக்கத்துக்கு அடிமையானவர் களின் தனிநபர் செலவீனம் நாள் ஒன்றுக்கு 500ரூபாவாக அதிகரித் துள்ளது.

நாடு முழுவதும் சுமார் ஒரு இலட்சம் பேர் போதைப்பொருளுக்கு அடிமையாகி இருப்பதாக போதைப் பொருள் தடுப்புப்பணியகப் பணிப் பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் பூஜித ஜெயசுந்தர தெரி வித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் மாத் திரம் போதைப்பொருள் பவனை யில் 10ஆயிரம் பேர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

போதைப்பொருள் பழக்கத்தை ஒழிக்கும் நடவடிக்கையில் அர சாங்கம் மாத்திரமன்றி, அரச சார்பற்ற நிறுவனங்களும், பொதுமக்களும் உதவவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

பொலிஸ் போதைப்பொருள்தடுப்புப் பணியகம் இம்மாதம் 23ஆம்திகதி தொடக்கம் 29ஆம்திகதிவரை போதைப்பொருள் ஒழிப்பு வாரமாக பிரகடனப் படுத்தி உள்ளதும் குறிப் பிடத்தக்கது. (தி)

## 80 பேருக்கு பெர்மிட்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அரச காணிகளில் வசித்து வந்த 80 பேருக்கு இது வரை பொமிட் வழங்கப்பட் டுள்ளது. (உ-35)

## இராசி பலன்

**13.06. 2003**

**(வைகாசி 30, வெள்ளி)**

| | | |
|---|---|---|
| சதுர்த்தசி | மு.இ. | 7.30 வரை |
| அனுசம் | மு.இ. | 8.25 வரை |
| இராகு காலம்- | | 10.22-11.52 |
| சுபநேரம்- | | 05.52-7.22 |

**மேடம்**
எதிர்பாராத பிரச்சினை, போசனசுகம், முயற்சி தாமதம், உடல் நலக் குறைவு.

**இடபம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனுகூலம், தனவரவு, உடல் நலம்.

**மிதுனம்**
சத்துருஜெயம், அதிக வருமானம், தொழில் விருத்தி, உறவினர் சந்திப்பு.

**கடகம்**
சிறு வியாதி, காரிய இடையூறு, தொழில் விருத்தி, சிந்தனை மிகுதி.

**சிங்கம்**
ரோகபயம், புதிய முயற்சி, கல்வியில் ஆர்வம் , தாய்வழி உறவு.

**கன்னி**
கூட்டு முயற்சி, இனிய சம்பவம், வாக்கு மேன்மை, காரிய சித்தி.

**துலாம்**
மாதர் நட்பு, எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம், வாக்குக்கலகம்.

**விருச்சிகம்**
நண்பர்கள் உதவி, புதிய பொருள் சேர்க்கை, ஆழ்ந்த சிந்தனை, போசன சுகம்.

**தனுசு**
மனக்கிலேசம், எடுத்த கருமங்கள் தாமத மாகும், கௌரவக்குறைவு ,சுபசெலவு.

**மகரம்**
தெய்வ தரிசனம், மன மகிழ்ச்சி, கீர்த்தி, பொருள் வரவு.

**கும்பம்**
சுக நிகழ்ச்சி, கடின உழைப்பு, பிறர் மதிப்பு, காரியசித்தி.

**மீனம்**
புதிய திட்டமிடல் ,உடல் உழைப்பு, உடல் நலக்குறைவு, முயற்சி தாமதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# சண்டிலிப்பாய் பி.செ. பிரிவில் வீடமைப்புத் திட்டம் அமுல்

(சில்லாலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் யு. என்.எச். சி.ஆர். நிறுவனம் வீட மைப்பு மற்றும் புனரமைப்புத் திட்டங் களை அமுல்படுத்தவுள்ளது.

இத்திட்டம், 3வகைப்படுத்தல்களின் கீழ் அமுல்படுத்தப்படவிருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

50ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுதிட்டம் மூலம் 30 பேரும், 30 ஆயிரம்ரூபா பெறுமதியான தற் காலிக வீட்டுத்திட்டம் மூலம் வன் னியில் இருந்து வந்து மீளக் குடியமர்ந்தவர்களும், 15ஆயிரம் ரூபா வீட்டுத்திட்டம் மூலம் 15 பேரும் பயனடையவுள்ளனர்.

இதேவேளை, இப்பிரதேச செயலர் பிரிவில் கடந்த கால போர் கார ணமாக 50 வீடுகள் முற்றாகச் சேத மடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-58)

## கட்டுப்பாடற்ற பிரதேசங்களில்

# பெரும்போக பயிர்ச்செய்கையை மேற்கொள்ள புலிகள் அனுமதி

(கொழும்பு)

முஸ்லிம் மக்கள் பெரும்போக விவசாய பயிர்ச் செய்கையை ஏதுவாக அச்சமின்றி மேற்கொள் ளலாம் என மட்டக்களப்பு அம் பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரி வித்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை பிரதேச செய லக கேட்போர் கூடத்தில் இராணு வக்கட்டுப்பாடற்ற பகுதியிலுள்ள முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகள் தொடர்பாக இதுவரை தீர்க்கப்படாத விடயங்கள் குறித்து ஆராயும் விசேட கூட்டத்தில கௌசல்யன் இதனை தெரிவித் துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசுகை யில், இராணுவக் கட்டுப்பாடற்ற பிர தேசங்களில் உள்ள விவசாயக் காணிகளில் முஸ்லிம் விவசாயிகள் எவ்வித தடங்கல்களுமின்றி தமது பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும்.

முஸ்லிம் மக்களுடன் நல்லுற வைக் கட்டி எழுப்புவதில் விடு தலைப்புலிகள் மிகவும் தெளிவுடன் இருக்கின்றனர்.

எதிர் வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள உப குழுக்கூட் டத்தில் முஸ்லிம் மக்களின் விவ சாயக்காணி தொடர்பாக மேலும் பல தீர்மானங்கள் எடுக்கப்பட வுள்ளன என்றார்.

இக்கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட உபகுழுவின் முஸ்லிம் பிரதிநிதிகள், தமிழீழவிடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளான சுதா மற்றும் தேவன்ஆகியோர் கலந்து கொண்டனர். (தி)

குளங்களை க்காத்து வளங்களைப்பேணிடுவோம்

வெள்ளி முற்றம்

# அப்பாவின் ஆசை !

இப்போது நேரம் இலங்கை நேரப்படி பிற்பகல் 2.00மணி.இந்திய நேரப்படி 1.30 மணி.

வெய்யிலின் கொடூரம்தாங்க முடியாததால் மீண்டும் எனது கைக் கடிகாரத்தைப் பார்க்கின்றேன். நேரம் சரியாகத்தான் உள்ளது. கடிகாரத்தை இரு தடவை குலுக்கி விட்டுப் பார்க்கின்றேன். கடிகாரம் ஓடுகின்றது. நேரம் சரியே.

சுற்றும்முற்றும் பார்க்கின்றேன், எனது நேரத்தை உறுதி செய்து கொள்வதற்காக.அயலில் யாருமே இல்லை என்பதை இப்போது தான் உணருகின்றேன்.நின்றவர்கள் நிழல் தேடிப் போய்விட்டார்கள்.

அண்மையில் செய்து கொண்ட அமைதி ஒப்பந்தம் காரணமாக , தமது சொந்த வீடுகளுக்குச் சென்று மீண்டும் தமது வாழ்வைக் கட்டி எழுப்பிட அனுமதி கேட்டுத் தமது கோரிக்கையின் நீதி நியாயங்களைப் பல பேராலும், பலவாறாகவும், பலதடவைகளிலும், பல இடங்களிலும் விளக்கிக் கூறப்பட்டும், உயர் பாதுகாப்பு வலயம அது இது என்று சாக்குப் போக்குக் கூறித் தமது அடிப்படை மனித உரிமை மறுக்கப்படுவது கண்டு வலி- வடக்கு மக்களின் நெஞ்சங்கள் ஆற்றாமையாலும் ஆவேசத்தாலும் தகிப்பதனைப்போன்று , பிற்பகலாகியும் வெய்யில் தாங்க முடியாதவாறு தகித்துக்கொண்டிருக்கின்றது.

வெய்யிற் கொடூரத்திலிருந்து தற்காத்துக் கொள்ளுவதற்குப் போதுமான நிழல் மரங்களின் மையால் வீதி ஓரத்திற் காணப்படும் சிறு சிறு மரநிழல்களிலும் கடைத் தாழ்வாரங்களிலும் மாறி மாறி ஒதுங்கி ஒதுங்கி நிற்கின்றேன்.

என்னைப்போலவே என்னுடன் வந்த உறவினர்களும் நண்பர் களும் தத்தமக்கு ஒதுக்கிடங்களைத தேடிக்கொண்டு வெய்யிலின் தகிப்பில் இருந்து ஓரளவுக்குத் தம்மைக் காத்துக்கொண்டு ஆங்காங்கே நிற்கின்றார்கள்.

அப்பாவின் ஆசையை- அவரது வேண்டுகோளினை- ஏற்று அவரது விருப்பம்போலவே -அவர் செய்து கொண்ட ஒழுங்குகளுக்கு அமைவாக அவரது உடலை, யாழ்.பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்திற்குச் சற்று முன்னர்தான் தானம் செய்து விட்டு நிற்கின்றேன்.

வீடு செல்வதற்காக எனது உடன் பிறப்புகள், உறவினர், நண்பர்கள் ஆகியோருடன் எம்மைக்கொண்டு வந்த காருக்காகக் காத்துக் கொண்டு நிற்கின்றேன்.

''எரிபொருள் நிரப்பிக்கொண்டு இதோ வருகின்றேன். உங்கள் அலுவல்களை முடியுங்கள்'' என்று கூறிக் கொண்டு சென்ற கார்க் காரனை இன்னும் காணவில்லை.

''எங்கைஅண்ணா... காரைக் காணவில்லை? '' என்று கேட்டுக் கொண்டு எனது இரண்டாவது தம்பி தனது ஒதுக்கிடத்திலிருந்து தார் வீதியினைத் துள்ளித் துள்ளிக் கடந்து கொண்டு என்னிடம் வருகின்றான்.

''அதுதானே , குமார். கடைசியாகத் தாலியைக்கழற்றி அப்பாவின் நெஞ்சிலே வைத்தபோது மயங்கி விழுந்த அம்மாபாடு எப்பிடியெண்டு தெரியவில்லை. கெதியாய்ப் போவம் எண்டால்,இவன் எங்கேயோ போய்க்கிடக்கிறான்'' என்று அலுத்துக்கொள்ளுகின்றேன்.

இப்போது தம்பியும் எனது ஒதுக்கிடத்தில் பங்கு போட்டுக்கொள்ளுகின்றான்.

''சீச்சீ... இரண்டு மணிக்கு மேலாகியும் இப்பிடி வதைக்குதே. எங்களை வாட்டி வதைக்க வேணும் எண்டது போலை'' என்று குமார் தனக்குத்தானே சொல்லிக் கொள்ளுகின்றான்.

ஆனால், இன்று இந்த வழக்கத்துக்கு முற்றிலும் மாறாக-இறந்த என் அப்பாவின் உடலை மருத்துவ பீடத்துக்கு-எமது மாணவர்கள் - நாளைய டாக்டர்கள்- ஆய்வு செய்து அறிவை வளர்த்துக் கொள்ளுவதற்காக வழங்கியுள்ளேன். அதாவது தகனம் செய்யாது தானம் செய்துள்ளோன் .

இந்த வழக்கம் நடைமுறை -இங்கு மிக மிக அரிதாகவே நடக்கின்றது. சமயச்சடங்கு சம்பிரதாயங்களிலிருந்து மாறவிரும்பாத-வேறு பட ஐஞ்சுகின்ற காரணத்தாலேயோ என்னவோ தகனம் செய்யாது தானம் செய்கின்ற இந்த நடைமுறை இங்கு மிக மிக அரிதாகவே உள்ளது.

இதனீல் இங்கு மருத்துவம் கற்கும் எமது மாணவர்கள் சில வசதியீனங்களுக்குள்ளாகின்றனர் என்பதும் உண்மையே.

அத்துடன் இங்கு கற்கும் எமது மாணவர்களில் பெரும்பாலானோர் தமது கற்கை நெறி முற்றுப்பெற்று டாகடர்களாகப் பட்டம் பெற்றதும் ''இஞ்சை எங்கடை ஆட்களுடன் வேலை செய்ய ஏலாது'' என்று மாத்திரம் கூறிக்கொண்டு இந்த மண்ணை மறந்து -இந்த மண்ணில் வாழும் தமது சொந்த மக்களுக்குச் சேவை செய்யவேணும என்னும் தங்கள் உயரிய ஜீவாதாரக் கடமையை மறந்து-தம்மை வளர்த்துக் கொள்ளும் ஒரேயொரு தணியாத தாகத்தினால்-சுயநல வேட்கையினால் தள்ளப்பட்டு- இந்த மண்ணைத் துறந்து வெளியே ஓடிப் போகிறதும்,எனது அப்பா எடுத்த தீர்மானம் போலவொரு தீர்மானம் எடுப்பதற்கு மக்கள் பின்நிற்பதற்கொரு காரணமோ யாரறிவார்?

எவ்வாறெனினும் தங்கள் கடமையை மறந்து விலகி ஓடும் எம்மவரால் எமது மக்கள் தான் பாரிய இடர்களை எதிர்கொள்ளுகின்றார்கள். வைத்தியசாலைகளுக்குப் போனால் அங்கு போதிய டாக்டர்கள் இல்லை.டாக்டர்களின் பற்றாக் குறையைப் போக்குவதற்கு அரசு அனுப்பும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த டாக்டர்களினாலும் எமது மக்களுக்குக் கிடைக்கும் பலன் மிக மிகக் குறைவே.




எனவே இங்கு மருத்துவபீடத்தில் கற்றுத்தேறி டாக்டர்களாகும் அனைவரும் ''இந்த மண்ணில் வாழும் மக்களுக்குக் குறைந்தது 3 வருடங்களுக்காவது கடமையாற்றுவோம்'' என்று திடசங்கற்பம் செய்து கொண்டால் எவ்வளவு பயனுள்ளதாக, உயர் பண்புள்ளதாக, மகிழ்ச்சியளிப்பதாக இருக்கும்? நடக்குமா இனிமேலாவது?

இவ்வாறெல்லாம் எனது அப்பா அடிக்கடி தமது ஆசையை -கருத்தை - எதிர்பார்ப்பை என்னிடம் வெளிக் கொணர்வதுண்டு!

அதேவேளை,எனது தந்தையாரின் சிந்தனை இவ்விதம் சிந்திப்பதற்குத் தூண்டிய காரணிகள் இவையாக இருந்தபோதிலும்,அவரது மாணவப பருவ காலத்து நிகழ்வு ஒன்றும இந்த விதமானதொரு சிந்தனைக்கு மூல காரணமாக இருந்தது என்பது எனக்கு மட்டுமே தெரியும்!

வீதியோரத்தில் வாகனத்துக் காகக் காத்திருக்கின்ற இந்தவேளையில் எனது நினைவுகள் எங்கேயோ நழுவிச் செல்லுகின்றனவே!

* * *

அக்காலத்தில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய தந்தைக்கு மூத்த மகனாகப் பாலசுப்பிரமணியனாகப் பிறந்த எனது தந்தையார், தாம் பிறந்த வயலூர்க் கிராமத்தில் தமது ஆரம்பக்கல்வியைக் கற்றார். வயலூரில் இருந்து ஒரு மைல் தொலைவில் உள்ளதொரு பிரபல கல்லூரியில் தமது உயர்கல்வியைக் கற்றார். அக்காலத்தில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (இன்றைய ஜீ.சீ.ஈ) விஞ்ஞானப் பாடங்களில் திறமைச்சித்திகளுடன் சித்தியடைந்தார். இவரது திறமையைக் கண்ட இவரின் தந்தையாரும் இவாின் ஆசிரியர்களும் இவரை உயர் பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு (எச்.எஸ்.சீ) மருத்துவக் கல்வி கற்பதற்கான விஞ்ஞான பாடங்களை கற்பதற்கு வேண்டிய ஊக்கமும உற்சாகமும் ஊட்டினார்கள். அந்நாட்களில ஏழுத்துப்பரீட்சையில் தோற்றிப் போதுமான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களைப் போராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு கூடத்தில் செயல்முறைப் பரீட்சைக்கு அழைப்பது வழக்கம்.அவ்விதம் எனது தந்தையாரும் முதற்தடவை எழுத்துப்பரீட்சைக்குப் பின்னர் ஆய்வு கூடச் செயல்முறைப் பரீட்சைக்கு அழைக்கப் பெற்றுப் பேராதனைக்குப் போய் வந்தார். நம்பிக்கையுடன் இருந்த அவரையும் அவரது தந்தையார் ஆசிரியர்கள்ஆகியோரையும் பாட்சைப்பெறுபேறு ஏமாற்றி விட்டது. இந்த ஏமாற்றம் சம்பந்தப்பட்ட அனைவருக்குமபெரும் கவலையைத் தந்ததெனினும் ''இது தானே முதல் முறை'' என்று கூறி மனதைத் தேறறிக் கொண்டு இரண்டாவது தடவை பரீட்சை எழுதினார். இரண்டாவது தடவையும் செயல் முறைப்பரீட்சைக்குச் சென்று வந்தாராயினும் இரண்டாவது தடவையும் ஏமாற்றமே மிஞ்சியது. இதனால் அவரது மருத்துவக் கல்வி கற்கும் இலட்சியம் தடைப்பட்டது. அதனால் அவரது திறமையை நம்பி இருந்த தந்தையார் உட்பட்ட அனைவருக்கும் இந்தத் துயரம் தேற்றிட இயலாததொன்றாகி விட்டது.

இத்தோல்வி கண்டு துவண்டு- தளர்ந்து போய்விட்ட அவர் சிறிது காலம் கற்பதையே கைவிட்டு விட்டுக் காலம் கழித்தார். ஒரு வித விரக்தியான மன நிலையிலேயே அவர் இருந்தார்.எனினும்காலம் அவரது கவலையை மாற்றி விட்டது.

சிறிது காலத்தின் பின்னர் பெற்றோரினதும் மற்றோரினதும் ஆலோசனைப்படி அவர் ஒரு தொழில் வாய்ப்பினைத் தேடும்முயற்சியில் முனைந்தார்.

அரசின் போட்டிப்பரீட்சை ஒன்றுக்குத் தோற்றிய அவர்,அரசு எழுதுநர் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டார். தென்னிலங்கையில் பல நகரங்களிலும் பல தரங்களிலும் பல பதவிகளிலும் திறமையுடனும் நேர்மையுடனும் பணியாற்றினார்.

காலம் கனிந்திடவே அவருக்குத் திருமணம் கைகூடியது.முதல் மகனாக நானும் இன்னும் ஆண்கள் மூவரும் பிறந்தோம். அவரது அறிவூட்டல் நெறிகாட்டலின் கீழே நாங்கள் நால்வரும் கல்வி கற்றோம். பட்டதாரிகளானோம். நல்ல பதவிகளிலும் அமர்ந்து கொண்டோம்.

எங்களுக்குக் கல்வி கற்பிக்கும் போதும், மனம் விட்டு எம்முடன் உரையாடும்போதும், இடைஇடையே தடைப்பட்டுப்போன தமது மருத்துவக் கல்வி பற்றி எனது தகப்பனார் ஒருவிதக் கவலையோடு குறிப்பிடுவது உண்டு.

அவரது அறுபதாவது வயதில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் சமயப் பணிகளில் முழு மூச்சுடன் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். இதனால் '' தொண்டர்பாலா'' என்று செல்லமாக-அழைக்கப் பெற்றார்.

அவர் ஓய்வு பெற்றுக்கொண்ட பின்னரும தமது மருத்துவக் கல்வி பற்றிக் குறிப்பிடுவதுண்டு.

அண்மையில் மருத்துவக்கல்வி கற்கும் எமது ஊரைச்சேர்ந்த ஒரு மாணவன்,எனது தந்தையார் மருத்துவ பீடத்திற்கு வந்திருந்ததனைத் தாம் கண்டதாகத் தெரிவித்திருந்தான். இது பற்றி அவரிடம் விசாரித்தபோது அவர் சரியான விளக்கம் தர வில்லை.

''அப்பா இடைவிட்ட மருத்துவப் படிப்பைத் தொடரப் போகிறாராக்கும்'' என்று கேலியாக நாம் கூறியதற்கு '' ஓமோம்... சும்மா போங்கோடா'' என்று கூறிப்பலமாகச் சிரித்தார். நாமும் அவருடன் சேர்ந்து சிரித்து விட்டு அதனை அத்துடன் மறந்து விட்டோம்!

வழமைபோல பிற்பகலில் அவருடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது ''பெரியதம்பி'' (மூத்த மகன என்பதால் அவர் என்னை இப்படித் தான் அழைப்பார்) மருத்துவப் பட்டப் படிப்பு படித்து டாகடராகத்தான் என்னால் வர முடியவில்லை. கடைசியிலை என்னுடைய விதி காலை வாரி விட்டது. கடைசி எனது உட லாவது எங்கள் மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்று விரும்புகின்றேன். எனவே எனது உடம்பை மருத்துவ பட்த்திற்குத் தானமாக வழங்க விரும்புகின்றேன் அதற்கான ஒப்புதலை- ஒழுங்குகளை மருத்துவ பீடத்தினருடன் செய்து விட்டேன். நான் படிக்க முடியாது போனாலும் மற்றவர்களாவது என்னில் படிக்கட்டும். அதற்காக எனது உடம்பைத் தானம் செய்யவேண்டும்'' என்றார்.

தந்தையார் தமது இறுதி நாள் பற்றிக் கூறுவார் என்று எம்மில் யாருமே கடுகளவேனும் கருதியிருக்கவில்லை. தனது உடலை மருத்துவ பீடத்திற்குத் தானம் செய்ய வேண்டும் என்று கூறுவார் என்றும் யாரும் கனவிலேயாயினும் எண்ணி இருக்கவில்லை. எனவே இதனைக் கேட்டதும் அங்கு சந்தோசமாகக் கதைத்துக் கொண்டிருந்த எனது தாயார் மற்றும் உடன் பிறப்புக்கள் உட்பட அனைவருக்கும் ஒரே அதிர்ச்சியாக- பேரதிர்ச்சியாக அமைந்து விட்டது.

யாரோ ஒரே நேரத்தில் எனது மூக்கையும் வாயையும் இரு கண்களையும் கைகளால் பொத்திச் சில மணித் துளிகளுக்குப்பின் விடுவித்தது போலிருந்தது அப்பாவின் இந்தப்பேச்சு.

சிறிது நேரம் ஒருவரையொருவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு இருந்தோமேயல்லாது எதுவுமே பேசுவதற்கு நாக்கு எவருக்குமே எழவில்லை. பேசத்தான் முடியுமா? பேச்சுத்தான் எழுமா? பேசத்தான் என்ன இருக்கிறது?

இதனைக்கேட்டதும் தாயார் ''ஐயோ... என்ரை ராசா'' என்று கூவிக் கொண்டு தந்தையாருக்கு அருகே சென்றவள் தந்தையாரின் இரு கைகளையும் பிடித்து அதில் தனது முகத்தைப்புதைத்துக்கொண்டு ''ஏன்னையா இப்ப உங்களுக்கு இந்த யோசனை வரவேணும்? நாங்கள் என்ன குறையை வைச்சோம்? என்ன பிழையைச் செய்தோம்?'' என்று விழிநீர் பெருகிடக் கெஞ்சலாகக் கேட்டாள். ஆனால் அப்பா சலனமின்றி சாந்தமாக இருந்தார் ''இது கேட்கத்தானோ நான் உயிரோடு இருக்கிறேன்? கடவுளே! என்னை கெதியாய் கூப்பிடையா என்னாலை இதைத்தாங்க முடியாதுள்ளதே'' எனறு கதறியவண்ணம் வீட்டி னுள்ளே ஓடினாள் அம்மா! ஓடிவிட்டாள். அவளைத்தொடர்ந்து அவ்விடத்தில் நின்றவர்கள் ஓடினார்கள். அம்மா என்ன செய்கிறாள் என்று பார்ப்பதற்கும் ஆறுதல் கூறுவதற்கும.

முருகு

தந்தையாரோ அனைத்தையும் எதுவித சலசலப்பும் இல்லாது அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தார்.

பொறுமை இழந்த நாம் '' ஏனப்பா உதுக்கு இப்ப என்ன அவசரம்? உதுக்குத் தானோ கொஞ்சக்காலத்துக்கு முன்பு மருத்துவ பீடத்திற்குப் போனனீர்கள்?'' என்று கேட்டோம்.

''ஓமோம் ....அது சரி... மனிசர் சாக மாட்டார்களோ? செத்தாப்பிறகு என்ன செய்ய வேண்டும் என்று உயிரோட இருக்கிறபோது தானே சொல்லி வைக்க வேண்டும். அதுக்கு ஏன் இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ?'' என்றார் அப்பா அமைதியோடு!

''அது சரி அப்பா?இதுக்கென்ன அவசரம்?'' என்று கேட்டேன.

''இதனை இப்போதே சொல்லிவிட வேண்டும் என்று என் மனம் சொல்லியதால் சொல்லிவிட்டேன். சரி ... சரி... இதை இந்தளவோடு விட்டு விடுங்கோ.ஆனால் தம்பி .... நான் சட்டத்தரணி மூலம் மருத்துவ பீடத்திற்குச் செய்து கொடுத்துள்ள ''மரண சாசனத்தில் '' எனது இந்த ஒழுங்கினை நிறைவேற்றும் பிரதிநிதியாக உன்னைத்தான் குறிப்பிட்டுள்ளேன்'' என்றார் என்னைப் பார்த்து.

''நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டேன்,சூட்டோடு சூடாக விசயத்தை அறிந்து கொள்ளும் ஆவலில் .

''ஆவி போனதும் மருத்துவபீடத்தினருடன் தொடர்பு கொண்டு உடலைத் தானம் செய்யக் கொண்டு வரும நேரத்தைத் தெரிவிக்க வேண்டும். அந்தளவுதான்'' என்றார் அப்பா, எதுவித பதட்டமும் இல்லாது.

''தம்பி அப்பிடியெண்டால் தான் உடம்பைக் கையேற்க ஒழுங்கு செய்து வைத்திருப்பினம். உடம்பைக் கொண்டு போற செலவு தருவினமாம்'' என்றார் மேலும் விளக்கம் தருவதற்காக

''அப்பா,உந்தக்காசு யாருக்குத்தேவை?அதை விட்டுட்டு வேறு ஏதாவது பிரயோசனமானதாகக் கதையுங்கோ''என்றேன்.

''அம்மா என்ன செய்கிறா என்று போய்ப் பாருங்கோ''என்றார்அப்பா!

அம்மா இருக்குமிடத்துக்குப் போய்ப் பார்த்தபோது அங்குள்ளவர்கள் ஆறுதல்-தேறுதல்-சொல்லி அம்மாவின்'' ஆவேச நிலை ''தணிந்திருந்தது.

இந்த நேரத்தில் யாரோ சிலர் வந்து அப்பாவை அழைத்துக் கொண்டு செல்லவே அந்தப்'' பயங்கர அமர்வு'' அத்துடன் முற்றுப்பெற்றது.

இது நடந்து சுமார் ஒரு வருடம் கழிந்து விட்டது.

இந்த ஒரு வருடத்துள்ளேயோ அதற்கு முன்னரோ ஒரு நாளாவது அப்பா தலையிடி காய்ச்சல் என்று சோர்ந்து இருந்ததில்லை. ஆனால் கடந்த புதன்கிழமை மாலை அப்பா நெஞ்சு நோ சாடையாக இருப்பதாக என்னைக் கூப்பிட்டுச் சொன்னார். உடனே மற்றவர்களின் உதவியுடன் யாழ். அரசினர் வைத்தியசாலைக்குப் பக்கத்து வீட்டுப் பரமசிவத்தின் காரில் கூட்டிச்சென்றோம்.

அப்போதும் அவர் ''எனக்கு அப்பிடி ஒன்றும்பெரிதாக சுகவீனம் இல்லை. ஏன் இந்த ஆர்ப்பாட்டங்கள்?'' என்று கடிந்து கொண்டார்.

''ஒன்றும் இல்லையென்றாலும் நெஞ்சு நோ எண்டதாலே ஒருக்கால் ஆஸ்பத்திரிக்குப் போய் சோதித்துப் பார்த்து விட்டால் பயப்பிடத் தேவையில்லையெல்லோ அப்பா'' என்று கூறிச் சமாதானப்படுத்தினேன். அவரும் ஏற்றுக்கொண்டார்.

வைத்தியசாலையில் இவரை பரிசோதித்துப் பார்த்த டாக்டர் இவரை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்தார்.

அவரது சுகத்தை அவதானித்த டாக்டர் வியாழன் பகல் வார்ட்டுக்கு மாற்றி விட்டார். எமக்கெல்லாம் அப்போது தான் மனதுக்கு நிம்மதி ஏற்பட்டது.

மறுபடியும் ஞாயிறு பிற்பகலில் அப்பாவுக்கு நெஞ்சு நோ அதிகரிக்கவே உடனடியாக அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். அங்கு டாக்டர்கள் பல வழிகளிலும் சிகிச்சை அளித்துப் பார்த்த போதிலும் அப்பாவின் உயிர் டாக்டர்களின் முயற்சிகளையெல்லாம் பொய்யாக்கி விட்டு அப்பாவினுடைய உயிர் பொய்யான மெய்யைவிட்டுப் பிரிந்து ''மெய்யை'' நாடிப் பொழுது மங்கி வரும் நேரத்தில் சென்று விட்டது.!

எம்முடன் ஆஸ்பத்திரியில் இருந்த தாயார் இது கேட்டு ''ஓ'' எனக் கதறி அழத்தொடங்கவே அவரை ஒருவாறு சமாளித்து காரில் ஏற்றி அனுப்பி வைத்தோம் வீட்டுக்கு!

அம்மா வீட்டுக்குப்போனதும் மறைவுச்செய்தி காட்டுத்தீபோல் ஊர் ,அயல் ஊர்களெங்கும் பரவி விட்டது.

மறுநாள் இறுதிக்கிரியைகள் முடிவுற்றதும் அஞ்சலி உரை தொடர்ந்தது அதனைக்கேட்க நெஞ்சத்திலொரு நெகிழ்வுண்டானது!

தந்தையாரின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த வாகனம் முன் செல்ல, எமது கார் பின் தொடர்ந்து ஐந்து மைல் கடந்து வந்து மருத்துவ பீடத்தை அடைந்தது.

அங்கே முன்னரேயே செய்யப்பட்டிருந்த ஒழுங்கின் படி தந்தையாரின் உடலை மருத்துவபீடத்தில் உரியவர்களுக்கு நெருங்கிய உறவினர்கள் நண்பர்கள் முன்னிலையில் கண்கள் குளமாகிட கைகள் நடுநடுங்கிட உள்ளம் கலங்கிட உரை தடுமாறிடத் தானமசெய்தோம்!

தகனம்செய்யப்பட வேண்டியவர் தானம் செய்யப்பட்டார்!

உயிருள்ள சிவமாக இருந்த போது நிறைவேறாத எமது அப்பாவின்ஆசை, உயிரற்ற சவமான பின்னர்தான் நிறைவேறியுள்ளது.

தான் படிக்க முடியாது போய் விட்டிருந்தாலும் மற்றவர்களாயினும் படித்திட உதவிட விரும்பிய அப்பாவின் ஆசை நிறைவேறியுள்ளது.

* * *

வாகனத்துக்காகக் காத்துக்கொண்டிருந்த எமக்கும் அதோ வாகனம் வந்து விட்டது வீடு செல்வதற்காக.

மருத்துவபீடத்தைச் சுற்றிக் கொண்டிருந்த எனது உள்ளம் அத்தொடர்பினை அறுத்துக்கொண்டு வீட்டில் இனிமேல் நடைபெறவேண்டியவை பற்றிச் சிந்திக்கத் தொடங்குகின்றது.

(யாவும்கற்பனை)



# அளவெட்டி கும்பழ
# ஆலய தேர்ச் சிறப்

## ஆசியுரை

### குரைகழல் நினைந்து வாழ்வாம்

**தும்பிமா முகவனாகித் தோன்றிய உமையாள் மைந்தன்**
**செம்பொருள் வேதமெல்லாம் சிரகிரி வரைந்த செல்வன்**
**நம்பிவாழ் அடியவர்க்காய் நவமணிக் கோயில் கொண்ட**
**கும்பழாவளைக் கணேசன் குரைகழல் நினைந்து வாழ்வாம்.**

இன்று (13.06.2003) வெள்ளிக்கிழமை அளவெட்டி கும்பழாவளை மகாகணபதிப்பெருமான் தேரேறி வீதிவலம் வருகிறார். இவ்வாலயம் சுமார் ஆயிரமாண்டுகளுக்கு மேற்பட்ட புராதன முடையது. பற்றைகள் சூழ்ந்த மண்மேட்டிலே பெரியகல்லாகக் காட்சிகாட்டி - தான் தோன்றியாக எழுந்தருளியவர் இப்பெருமான்.

முற்காலத்திலே மாருதப்புரவீகவல்லி, தனதுகுதிரை முகங்காரணமாக, திருத்தம்பலேஸ்வரம் என்னும் கீரிமலைச் சிவனைவழிபட்டு, அவரது உத்தரவுப்படி, கோயிற்கடவை என்னும் (மாவிட்டபுரம்) தலத்து முருகனை வழிபட்டாள். குதிரைமுகம் நீங்கியது. ஆயினும், அவளது மனத்தில் தனக்குக் குதிரை முகம் இருப்பதாக எண்ணமிருந்தது. அதனால் முருகன் கட்டளைப்படி மாவிட்டபுரத்துக்குத் தெற்கே ஏழு விநாயகராலயம் நிர்மாணிக்க நினைத்தாள். அதன்படி கும்பழாவளைக்கு நான்காவது தலமாக வந்து சேர்ந்தாள். அக்காலம் சிறுகுடிசையாய் இருந்த கும்பழாவளையான் கோயில் வந்ததும், அவளது மனம் தூய்மையாகி குதிரைமுகத்தினெண்ணம் விடுபட்டது. (இந்தக் கும்பழாவளையின் முற்பகுதி நிலம் அதனால் மாவிடுதிட்டி எனப்பெயர் பெற்றது.) மாருதவல்லி, எம்பெருமானின் ஆலயத்தைச் சிறப்புற அமைத்துக் கும்பாபிஷேகம் செய்தாள் என்பது வரலாறு.

இப்பெருமான் வேண்டியவர்க்கு விரும்பிய வரங்கொடுத்துக் காத்துவருகிறார். நாட்டுவளம் கல்விவளம், சுந்தானச் செல்வம், பிணியில்லாவாழ்வு எல்லாம் கொடுக்கும் பெருமானை தேரில் தரிசித்து இஷ்டசித்திகள் பெறுமாறு சைவமக்களை வேண்டுகின்றோம்.

**அருட்கவி சீ.விநாசித்தம்பி (M.A)**

## தர்மகர்த்தா சபைத் தலைவரின் ஆசிச்செய்தி


கலைபண்பாடு சமயாசாரங்களில் தலைசிறந்து விளங்கும் கிராமங்களில் அளவெட்டி கிராமமும் ஒன்றாகப் பழமை தொட்டுக் கணிக்கப்பட்டுவருகிறது. இக் கிராமத்தின் மத்தியில், பழம்பெருமை வாய்ந்த வரலாற்றுப் புகழ்பெற்ற ஆலயமாக அமைந்துள்ளது அள்வெட்டி கும்பழாவளை விநாயகர் ஆலயமாகும். அரசிளங்குமாரியான மாருதப் புரவீகவல்லி தனது குதிரைமுகம் நீங்கிய்மை குறித்து , யாழ்.குடாநாட்டில் ஸ்தாபித்த ஏழு விநாயகர் ஆலயங்களில் கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயமும் ஒன்றாகும். அன்று தொடக்கம் சைவ ஆசார விதிமுறைப்படி பூஜை, விழாக்கள், வழிபாடுகள் இவ்வாலயத்திற் சிறப்பாக நடைபெற்று அப்பெருமானின் பேரருளினால் இக்கிராம மக்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்கள்.

அண்மையில் இவ்வாலயம், பொதுமக்கள் வரையாது வழங்கிய நிதி உதவியோடு தர்மகர்த்தாக்கள்சபை, திருப்பணிச்சபை ஆகியவற்றின் ஒழுங்கான நெறிப்படுத்தலின் கீழ் 'ரூலின்ஸ்' ஸ்தாபனத்தாரின் அயராத உழைப்பில் பெருந்தொகைப் பணச் செலவில் பூரணமாகப் புனரமைக்கப்பட்டு, 2002ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேகம் நடாத்தப்பெற்று, வேத ஆகம விதிமுறைப்படி அமைந்த, தெய்வீக ஒளிவீசும் பொலிவு மிக்க ஆலயமாக விளங்குகின்றது. இவ்வாலயத்தின் வழமையான வரலாற்றுப் புகழ் பெற்ற வருட மஹோற்சவம் 04.06.2003 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15.06.2003 பூங்காவனத் திருவிழாவோடு நிறைவு பெறவுள்ளது. எம்பெருமானின் வருட மஹோற்சவம் எவ்வித குறையுமின்றி மங்களகரமாக இனிது நிறைவேற விநாயகப் பெருமானின் பேரருளை வேண்டி எனது ஆசிகளை வழங்குகின்றேன்.

**தர்மகர்த்தாக்கள் சபை,**
**கும்பழாவளைப் பிள்ளையார் கோவில், அளவெட்டி.**

**சோ.சிவப்பிரகாசம்,**
**தலைவர்.**

கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய முன்பக்கத் தோற்றம்



எம்பெருமான் தேரோ



## வேதனை தீர்க்கவரும் வேழத்தானை வேண்டி...

அளவையூரின் அருமருந்தன்ன செல்வமாய் வீற்றிருக்கும்
கும்பழாவளை வாழ் விநாயகப் பெருமானே!
மக்களின் மாண்புகள் பெருக, மாணவர் கல்வியில் சிறக்க
ஊர்தோறும் ஒற்றுமை ஓங்க, எங்கள் உளமெல்லாம் நற்சிந்தை வளர
பத்தி செய்து பலன் பெற்று மிளிர, பாரெங்கும் அமைதியில் திளைக்க
திக்கற்றவர் திடம்பெற்று வாழ, தீமைகள் திண்டாடி ஓட
வளங்கள் இவ்வுலகெங்கும் நிரம்ப, வள்ளலான் நின்னை நாம் நாட
உன் ஆலய தொண்டர்களின் இன்னல்கள் போக்கி
அவர்தம் வாழ்வு சிறந்திட வழிகாட்டி
'தேரேறிவந்து திரிவினை நீக்கி, திக்கெட்டும் உன்னருள் பரப்பி
புகழ் பரவி வாழ்கவென வாழ்த்தி, வணங்கி, வேண்டுகிறோம்'

**செ.செல்வநேசன்,**
**தலைவர்.**
**கும்பழாவளை தொண்டர்சபை.**

**மலர் வடிவமைப்பு**
**ச.சசீந்திரன்**
**பிரதேச செய்தியாளர்**
**அளவெட்டி.**

## அளவெட்டி கு

''விநாயகே
விநாயகனே
விண்ணிற்கு
கண்ணிப் ப
மூர்த்தி விசேடம்,
பிள்ளையார் ஆலயம் இ
மாருதப்புரவீக வல்லி என்
ஆலோசனைப்படி யாழ்ப்பா
ஆலயத்தை அமைத்தார்.
காரணத்தினால் விநாயக
விநாயக ஆலயங்களை ஸ்
குதிரை முகம் முற்றாக நீங்
மா + இழி + திட்டி (குதிரை
இருந்ததற்கும் சான்றுகள் உ
மாடுமேய்க்கும் சிறு
பார்த்த போது ஏதிரே உள்ள

ஒரு கல்லும் இருந்தது. இதனை ஊர்மக்கள் அறிந்து வந்து அக்கல்லை சிவன் என்றும் அம்மன் என்றும் வழிபட் நானிருக்கின்றேன் என்னைப் பிள்ளை என்றும் விநாயகர் என்றும் வழிபடும்படி கூறியதாகவும், கொம்பை ஏந்திய என வந்தது என்றும் கூறுவர்.

பசுக்கள் கும்பலாக மேய்ந்த இடம் ஆகையால் கும்பல் + ஆவளை கும்பழாவளை என பெயர் உள சமாதானமாக ஒரு தீர்வு காணப்பட்டது. அதன்படி ஏழுபேர் கொண்ட தர்மகர்த்தா சபை ஆலயநிர்வாகத்தை நடா வளர்ச்சி பெற்றது. மூன்று தேர்களும் ஒரே வரிசையில் விடக்கூடிய அழகிய தேர்முட்டியும், மண்டபமும், ஆலயத்திலும் காணமுடியாதவாறு அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் இறுதியாக 01.02.2002இல் புனருத்தார இருப்பிடம் என்று சொல்லும் அளவிற்கு புதுப்பொலிவுடன் விளங்குகின்றது. யாழ்மண்ணில் எங்கும் காணமு மகிழ வேண்டிய ஒன்றாகும். விநாயகப் பெருமானின் 32அழகிய தோற்றங்களும் வரலாற்றுக் காட்சிகளும் அ அழகுடன் வாய்ந்திருப்பது அப்பெருமானின் திருவருளும் அடியார்களின் பக்தியுமே காரணமாகும். திருப்பல நிறைவேற்றப்பட்டுள்ளது. ஓவியக் கோவிலில் காவியக் கருவியாய் அமைந்திருக்கும் கும்பளாவளைக் கண புரிகிறான். யாழ்.மக்கள் இங்கு நடந்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து சென்ற காலத்தில் எல்லா ஆலய பூசைகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. பெருமானின் திருவருட் செயலுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். த என விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**ரமணன் வீடியோ & தொலைத் தொடர்பகம்**
புதிய பழைய C.Dக்கள், வீடியோ நாடாக்களை வாடகைக்கு வழங்கப்படும்

**விநாயகர் தொலைத் தொடர்பகம்**
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.
T.P: 070 - 212561

**டினேஸ் அரைக்**
சகலவிதமான தான
அரைத்துக் கொடு
அளவெட்டி தெ

**ரூபி நகை மாளிகை**
111/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 2828

**ரூபன் பல்பொருள் வாணிபம்**
K.R. அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

**வித்தக**
புதிய, பழைய வீடியோ
வாடகைக்கு வழ
கூட்டுறவாளர் வீதி,

**சத்தியநாதன் மில்**
மகாத்மா வீதி,
அளவெட்டி.

**கஜமுகன் தொலைத் தொடர்பகம்**
அன்பளிப்புப் பொருட்கள், குளிர்பான வகைகள், கணனி அச்சக வேலைகள்
யாழ்.-கொழும்பு பிரதான பதிவுகள்
T.P: 070 - 212517, 070-213374

'கூட்டுறவே நாட்
அளவெட்டி மல்
**பலநோக்கு கூட்டுற**
கூட்டுறவாளர் வீதி,
T.P: 021-21

**நியு கமல் செரமிக்ஸ்**
எல்லா வகையான மாபிள்வகைகள்,
எஸ்லோன், பிளாஸ்ரிக் வகைகள்
யாவும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் கிடைக்கும்
T.P: 222 2085

**சிறி ரட்ணாஸ் வைண்டிங் & மோட்டோஸ்**
68, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


**விநாயகர்**
**களு**
கூட்டுறவாள
அளவெ

# பழாவளைப் பிள்ளையார்
# தேர்த்திருவிழா சிறப்புமலர் - 13.06.2003

ருமான் தேரேறி வரும் காட்சி



குமாரத்தி தீர்த்தக்கேணியின் புதிய தோற்றம்



## பிரதம குருவின் ஆசிச் செய்தி

*'மூஷிகவாகன மோதக ஹஸ்த சாமரகர்ண விளம்பித ஆத்ர*
*வாமனரூப மஹேஸ்வர புத்ர விக்னவிநாயக பாதநமஸ்தே!'*

துவஸாரோகணம் முதல் தீர்த்தம் வரை நடைபெறும் மஹோற்சவம் இறைவனின் பஞ்ச கிருத்தியங்களைக் குறிப்பதாகும். இதில் இரதோற்சவம் அழித்தற் தொழிலைக் குறிப்பதாகும். அதாவது இறைவன் அடியவர்களுக்காக அடியவர்களின் மீது கொண்ட கருணையின் பொருட்டு அடியவர்களின் மும்மல இருளை அழிப்பதைக் குறிப்பதாகும். இப்படிப் பெருமைமிக்க இரதோற்சவம் இன்று மாருதப் புரவீக வல்லியினால் ஸ்தாபிக்கப்பட்டதும், சரித்திரப் பிரசித்திபெற்றதுமான அளவெட்டி அருள்மிகு கும்பழாவளை சந்திரசேகர விக்கினேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் நடைபெறுகிறது. இந்தப் பெருமை மிக்க இரதோற்சவத்தில் அடியார்கள் எல்லோரும் கலந்து கொண்டு தேர்வடம் பற்றி இழுத்து எல்லாம் வல்ல விக்கினேஸ்வரப் பெருமான், சிவகாமசுந்தரிதேவி சமேத சிதம்பரேஸ்வரப் பெருமான் மகாவல்லி கஜவல்லி சமேத சுப்பிரமணியப் பெருமான் ஆகியோரது திருவருளைப் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல கும்பழாவளையானை வணங்கி எங்களது நல் ஆசிகளை வழங்குகின்றோம்.

'லோகா சமஸ்தா சுகினோபவந்து'

ஆலயப் பிரதமகுருக்கள்
பிரமஸ்ரீ இ.சோமசுந்தரேஸ்வரக் குருக்கள்
மகோற்சவக் குருக்கள்
பிரமஸ்ரீ இ.விஸ்வேஸ்வரக்குருக்கள்.

## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய வரலாறு

*''விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்*
*கண்ணிப் பணிமின் கனிந்து''*

...த்தி விசேடம், தலவிசேடம், தீர்த்த விசேடம் மூன்றும் ஒருங்கு அமையப்பெற்றது அளவையூர் கும்பழாவளைப் ... ஆலயம் இவ்வாலயத்தின் இரதோற்சவ விழா இன்று கோலாகலமாக நடைபெறுகின்றது. பூர்வீகத்தில் ...க வல்லி என்னும் சோழ இளவரசி தனது குதிரைமுகமும் குஷ்டரோகமும் நீங்காமை கண்டு தவசீலர் ஒருவரின் ...ப்படி யாழ்ப்பாணத்தில் வந்து கீரிமலையில் நீராடி கந்தசாமி உபாசனை செய்து மாவிட்டபுரத்தில் முருகன் ... அமைத்தார். கந்தசாமி உபாசனையால் குதிரைமுகம் பிறர் பார்வைக்கு மாறியது தனது பார்வைக்கு மாறாத ...ல் விநாயக வழிபாடு செய்யாமையே காரணம் என தேறி கொல்லன்கலட்டி தொடக்கம் கல்வளை ஈறாக ஏழு ...லயங்களை ஸ்தாபித்தார் என்றும் இவற்றுள் நடுநாயகமாக விளங்கும் கும்பழாவளை விநாயகரை ஸ்தாபித்தும் ... முற்றாக நீங்கியது என்பதும் வரலாறு. குதிரைமுகம் முற்றாக நீங்கியதனால் இவ் ஆலயம் அமைந்துள்ள இடம் ...திட்டி (குதிரைமுகம் மாறிய மேடு) என்னும் பெயர் பெற்றது. இவ்ஆலயத்தின் அருகே குமாரத்தி குளம் ஒன்றும் ... சான்றுகள் உள்ளன. இவ் ஆலயம் மாருதப் புரவீக வல்லியின் வருகைக்கு முன்பே இருந்தாக ஐதிகம் உண்டு. ...மேய்க்கும் சிறுவன் ஒருவன் இந்த இடத்தில் மாடுகளை மேயவிட்டு ஒரு மரத்தின் கீழ் உறங்கிவிட்டான். எழுந்து ... ஏதிரே உள்ள மண் மேட்டில் ஒரு சோதி தோன்றியது சோதியைச் சூழ்ந்து எருக்கம் செடிகளும் அதன் மத்தியில்

...என்றும் வழிபட்டனர். அக்காலத்தில் பெருமான் தன்மீது பக்தியுள்ள ஒரு பெண்ணின்கனவில் தோன்றி மண்மேட்டில் ...கொம்பை ஏந்தியபடி காட்சியளித்தபடியால் கொம்பு + ஆவளை கொம்பளாவளை என்றும் அது மருவி கும்பளாவளை

... பெயர் உண்டாயிற்று எனவும் கூறப்படுகிறது. இவ்வாலயத்தின் நிர்வாகச் சீர்குலைவினால் 1948ஆம் ஆண்டு ...வாகத்தை நடாத்திவருகிறது. தர்மகர்த்தா சபை பொறுப்பேற்ற பின்பேஆலயம் எவரும் அதிசயிக்கத்தக்க வகையில் ...மண்டபமும், மூன்று தேர்களும் பாதுகாப்பாக விடக்கூடிய பிரமாண்டமான மண்டபமும் யாழ்ப்பாணத்தில் எந்த ...ல் புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலயம் மறுசீரமைக்கப்பெற்று சிற்ப ஓவியம் கலைகளின் ...ங்கும் காணமுடியாத அழகு வாய்ந்த கலை அம்சங்கள் நிறைந்த தீர்த்தக் குளம் நாம் ஒவ்வொருவரும் பார்த்து ...காட்சிகளும் அலங்கரிக்கின்றன. இவ்வாலயத்தில் நடைபெறும், நடைபெற்ற திருப்பணி வேலைகள் அனைத்தும் ...கும். திருப்பணி வேலைகள்சில தனிப்பட்ட உபயங்களாகவே இருக்கின்றன. ஏனையவை பொதுப்பணியாகவும், ...வளைக் கணபதி இவ்வூர் மக்களின் இன்னல் அகற்றி மல இருள் அகற்றி நிறைந்த இன்பவாழ்வு நல்கி அருள் ...எல்லா ஆலயங்களும் பூட்டப்பட்டு பூசைகள் நடைபெறாது இருந்த நேரத்திலும் இவ்வாலயத்தில் மூன்று காலப் ... காட்டாகும். தமிழ் மக்களின் இன்னல் தீர்த்து ஆரோக்கியமான நல்வாழ்வு பெற்று எங்கும் இன்பமே சூழவேண்டும்

## தர்மகர்த்தாசபை செயலாளரின் ஆசிச் செய்தி

***'வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்'***

என்பது உதயவாக்கு சங்கத்தமிழ் மூன்றையும் அள்ளித்தரும் துங்கக்கரிமுகத்துத் தூயமணியாகிய விநாயகப் பெருமானுக்கு மாருதப் புரவீகவல்லியாம் சோழ அரசிளங்கன்னி தன் குதிரைமுகச்சாயல் முற்றாக நீங்கப்பெற்றமைக்காக அனவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஏழு விநாயகர் ஆலயங்களில் ஒரு நாயகமாக விளங்கப் பெறுவதே கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம் ஆகும். மாருதப் புரவீக வல்லியின் குதிரைமுகம் முற்றாக நீங்கப் பெற்ற இடமாக கோயில் அமைவிடம் இருக்கின்றது. இதனை 'மாவிழிதிட்டி' என அழைக்கப்பட்ட போதிலும் தற்காலத்தில் இச்சொல் மருவி 'மாடுதிட்டி' என அழைக்கப்படுகின்றது. தற்பொழுது தீர்த்தக்கேணியாக விளங்கும் இடத்திலேயே மாருதப்புரவீகவல்லி நீராடியதாக வரலாறு கூறுகின்றது. அத்தீர்த்தக் கேணி 'குமாரத்தி குளம்' என்ற பெயரால் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இப்பெயரும் இன்று மருவி 'குமாரத்தி தீர்த்தம்' என வழங்கப்படுகின்றது.

இத்தகு ஆலயத்தில் வினைநீக்கும் விநாயகன் எழுந்தருளி இருந்து பக்தர் குறைதீர்த்து வருகிறான். இதனால் அளவையூர் புனிதம் பெறுகின்றது. சிறுவர்கள் முதியோர் என்றில்லாது பக்தி வயப்பட்டு விநாயகனின் தொண்டர்களாக விளங்குகின்றனர். வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் விநாயகன் இன்று பஞ்சமுக விநாயகனாக தேரில் ஆரோகணித்து அருள் புரிகின்றார். கற்பூரச்சட்டி ஏந்துவோர் காவடி ஆடுவோர் முன்செல்ல அனைவரும் வடம் தொட்டிழுக்க பக்தர்வழி கும்பழாவளையான் பவனிவர ரதத்தின் மணிகளும் கொடிகளும் அசைந்துவர ஓங்கார நாதம் ஒலிக்க, அந்தணர்கள் வேதமந்திரங்களை ஓதிவர, பக்தர்கள் தேவார பாராயணம் பாடிவர தேரின் பின்னே அங்கப்பிரதட்சணம் செய்வோரும். அடியழிப்போரும் வழிபாடுகள் செய்துவர கும்பழாவளையான் பவனிவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

யாழ்ப்பாண பிரதேசத்தில் இன்று காணப்படும் ஆலயங்களுள் பிரசித்தமானதாக இவ்வாலயம் விளங்குகின்றது. அதன் அழகும். பொலிவும், பக்தர்களை ஈர்ப்பதாக உள்ளது. இதனை கண்டவர், கேட்டவர், அனைவரும் எம்பெருமானின் அருள்பெற்று சீரும் சிறப்புமாக வாழ எம்பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

*''திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்*
*பெருவாக்கம் பீடும் பெருக்கும் - உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்*
*காதலாற் கூப்புவர் தம்கை''*

மா.மயில்வாகனம்,
செயலாளர்.


...ரைக்கும் ஆலை
...ன தானியங்களும்
... கொடுக்கப்படும்
...ட்டி தெற்கு.

முகுந்தன் சைக்கிள் வேக்ஸ்
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

புவனேஸ்வரன் கடை
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.

...த்தகம்
...வீடியோ நாடாக்கள்
...ந வழங்கப்படும்
... வீதி, அளவெட்டி.

சுகப்பிரதா தொலைத் தொடர்பகம்
குறைந்த கட்டணத்தில் கூடிய சேவை
கும்பழாவளை வீதி, அளவெட்டி.
T.P: 070 - 213322

பொன்மலர் தொலைத்தொடர்பகம்
குறைந்த கட்டணத்தில் நிறைந்தசேவை
பண்டத்தரிப்பு வீதி, அளவெட்டி.
T.P: 070 - 212558, 0777-731-819

...வ நாட்டுயர்வு'
...ட்டி மல்லாகம்
...கூட்டுறவுச் சங்கம்
... வீதி, அளவெட்டி.
...021-212530

'மக்களின்சேவையே மகத்தானது'
தெல்லிப்பழை ப.நோ.கூ சங்கம்
துர்க்காபுரம் கே.கே.எஸ். றோட், தெல்லிப்பழை.
T.P:021-222 3053, 222 3054

ஆலய
குமாரத்தி
தீர்த்த கட்டட நிர்மாணியும்,
ஊழியர்களும்.

...கர்
...களஞ்சியம்
...வாளர் வீதி,
...அளவெட்டி.

விநாயகர்
சைவ உணவகம்
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.

# இதய வெளியில் இறைவன் நடனம் புரிகின்றான் என்ன குறை எங்களுக்கு எல்லாம் சிவமன்றோ!

சிதம்பர நடராசர் ஆயிரங்கால் மண்டபத்திற்கு எழுந்தருளி அபிடேகம் ஆடும நாள் ஆண்டுக்கு இருநாள்கள். ஒன்று மார்கழித் திருவாதிர நாள். இன்னொன்று ஆனி உத்தர நாள். ஆனி உத்தர நாளைஒட்டி ஆண்டுத்திருவிழா நிகழும். ஆதலால் ஆண்டுத் திருவிழாவுக்குச் சென்று ஆனி உத்தர அபிடேக தரிசனம் செய்வதை நியமமாகக் கொண்ட அன்பாளர் பலர் அந்நாள்களில் (இந் நாட்டிலும்) இருந்தனர். அவர்களிற் சிலர் சிவயோக சுவாமிகளின் அன்பர்கள். சுவாமிகள் அவர்களுக்கு உபதேசம் செய்தவை வருமாறு.

## கடவுள் ஒருவர் இருக்கிறார்

சிதம்பர தரிசனம் நிறைவானதோர் கடவுட்தரிசனம் என்ற எண்ணம் எம்மவரிடம் ஊறிப்போனதோர் எண்ணம். சிதம்பரம் என்பது அச்சொல் பொருள்விளக்கப்படி ஞான வெளி யேயாகும். 'சிற்பரவியோம மாகும் திருச்சிற்றம்பலம்' என இதனைப் பெரியோர்கள் விளக்கி இருக்கின்றனர். இந்த ஞானபெருவெளியே பெருமானின் ஆனந்தமா நடனம் நிகழும் அம்பலம். இதனால பெருமானைச் 'செம்பொன அம்பலவாணன' எனவும் பெரியோர் கூறினர். செம்பொன் அம்பலம் என்பது தில்லைவனததுச் சபையன்று. அச்சபை அதற்கான அடையாளமாம். அந்த அடையாளமாகவே சபைக்கூரைக்குப் பொன்வேயந்து பொன்னம்பலம் எனவும் வழங்கலாயினர். மூல முதலான பொன்னம்பலம் செம்பொனனம்பலம் என்னும் சொல்லால் சுட்டப்பெறும் பரவெளியேயாகும். அண்டங்களெல்லாம் தங்குதற்கிடமான இப் பூதாகாயத்திற்கும் ஆதரமானதே அப்பரஞானவெளி. அப்பரஞான வெளியில் உள்ள பெருமான் ஆராலும் காண்டற்கரியவர். மூவருக்கும் முதலானவர், ஆராயும் வேதத்தாலும் அறியொணா திருப்பவர். இன்னதன்மையன் என்று இன்னும் எவராலும் எடுத்துச் சொல்ல இயலாதவர். என்றும் இருந்தபடியே இருப்பவர். இவ்வாறெல்லாம் ஒருவாறு சுட்டுதற்குரிய பரமசிவம் பரமஇரகசியமாக உள்ளார். இதில் அணுவும ஐயததிற்கு இடமில்லை. இவ்வண்ணம் ஆதிமூலமாய் அனைத்தையும் இயங்காமல் இயக்கிக் கொண்டிருக்கும் பரமசிவத்தின் உண்மையைக் 'கடவுள் ஒருவர் இருக்கிறா' என்ற வாசகம் உணர்த்தி நிற்கின்றது.

## அவர் எங்கும் இருக்கிறார்

பரம இரகசியமாயுள்ள பரமசிவமே சிதம்பரத்துச் சிற்சபையில்நின்று நடம புரிகின்றார். திருவாரூர் ஆகிய கோயில்களிலும் எழுந்தருளி இருக்கிறார். அவரே இருநிலனாய்த் தீயாய் இயமானனாய் என்றவண்ணம் அட்ட மூர்த்தியாயும் பொலிந்திலங்குகிறார். உயிருக்குயிரான ஆத்மநாதராக உறைபவரும் அவரே. உயிர் உறைதற்கான ஊனிலும அவரே நிறைந்துள்ளார். உணர்வும் அவரே. உணர்வுக்கெல்லாம் வித்தும் அவரே. அவர் சிறு தூசிலும் நிறைந்துள்ளார் அவர் இல்லாதஇடம் ஏதுமில்லை. அவர் செறிவொளியாது நிற்கும் சிவம். இந்தச் செறிவொளியாதிருக்கும் ஒன்றிய நிலையை 'அவர் எங்கும் இருக்கிறார்' என்ற வாசகம் உணர்த்தி நிற்கின்றது. இது 'எங்கும் சிதம் பரம' என்ற திருமந்திர வாசகத்தை



எளிதாய் உரைக்கும் ஓர் இன்னுரை போலும்.

## என்னோடும் கூட இருக்கிறார்

கடவுள் எங்கும் இருக்கின்றார் என்னும் செறிவுபெறச் சொன்ன வாசகத்தின் தொடர்பாய், இயல்பாக எழும் இன்னொரு வாசகமாக என்னோடும் கூடஇருக்கிறார் என்ற வாசகம் உளது. 'என்னிதய வெளியிலே பொது நடம் புரிகின்றான்' என்று சொல்லியவண்ணம் சுவாமி தம் சித்தத்துள் திகழும் சிவசோதியைக் கண்டனுபவிக்கும் சுவானுபவத் தெளிவில் நின்றும் இவ் அருள மொழியைக் கூறுகின்றார். இதய வெளியில் உயிருக்குயிராக உறைபவர் கடவுள் என்ற உண்மையைத் தொட்டு நிற்கும் இவ்வருள்மொழி, இவ்வருள்மொழியைக்கூறும் சுவாமியின் நாவும் கடவுளே என்னும் உணமையை உணர்த்தும் குறிப்பினதாகும். 'கூறும் நாமுதல் எல்லாம் அதுவடா' எனும் நற்சிந்தனை வாக்கும் இதனைத் தெளிவுபடுத்தும். சுவாமி 'சிதம்பர நடனம் பார்' எனக்கூறி அன்பர்கள் சிலருக்கு நடனம்ஆடி காட்டியதும். உண்டு அவாதம் திருப்பாதம் நடராச வள்ளலின் நளின பொற்பாதத்தினும் வேறன்று. தீவிரதரமான பக்தர்கள் சுவாமியை சிவமாகவே கண்டனர் என்பதும் ஈண்டு சிந்திக்கத்தக்கதாம்.

## எனக்குச் சகல சம்பத்தும் உண்டு

'என்னகுறை எங்களுக்கு எல்லாம் சிவமன்றோ'என்றோர் நற்சிந்தனை வாசகம் ஒன்றுண்டு. எங்கும் கடவுள் நிறைந்திருக்கையில் ஒரு குறையும் நேரவழியில்லையே! குறைவென்று நினைக்கும் நினைவொன்றே குறையாகின்றது. சீமானான பெருமான் சுவாமியோடு கூடஇருக்கையில் சுவாமிக்கு என்ன குறை! நமக்குக் குறைவில்லை என்பதை நல்ல வாக்காகக கொண்டவர் எங்கள் சுவாமி. மூல பண்டாரத்தை வழங்கும் சௌபாக்கிய வஸ்து அவரைக் கணமும் பிரியாதிருக்கையில் அவருக்கு வேணடியது யாது? வேண்டுபவை எல்லாம், வேண்டாமை என்னும் விழுச்செல்வத்தை உடைய அப்பெரும் செல்வருக்கு வேண்டும்போதுகிடைத்தது. இகபர சுகங்கள் மிக்க பெருவாழவில் சுகிர்த்திருக்கும் சுவாமியினது சுவானுவத் தினின்றும் மலர்ந்த இவ் வருள்மொழி, சுவாமியின் முன்னிலையில் இருக்கும் அன்பர்க்கும் நிறைந்த மனதை அளிக்கவல்லதாம். அவ் அன்பர்கள் சிதம்பர தரிசனம் செய்யமுடியாதுபோன சஞ்சலம் தீர்ந்து சந்தோஷம் அடைந்திருப்பர். கண்களிற் காணும் சிதம்பர தரிசனத்தினும் மேலான உணர்வினிற் சுகிக்கும் சிதம்பர தரி சனம் பெற்று நிறைவுற்றிருப்பர்.

## சுவானுபவ வாக்கு

சுவாமி கடவுள் ஒருவர் இருக்கிறார் ஆகிய நான்கு வாசகங்களையும் கூறியபின் 'இவை பெரியோர் சொன்ன மொழி' என ஆப்தர் வாக்கியங்கள் வரிசையிலுள்ளனவாகக் காட்டுகின்றார். இப்பொருள்படும் வாசகங்கள் பலவற்றை இடமகன்ற ஞாலத்தில் தோன்றிய ஞானியர் பலரும் கூறியிருப்பதுஉண்மையே.ஆயினும் சுவாமிவாய்மொழியாக வந்த இவ்

**வெள்ளி நற்சிந்தனை**

வெளிமையான, இயல்பான மொழிகள் சுவாமியின் சுவானுபவத்தினின்றும் மலர்ந்த அருளில்தோய்ந்த ஆற்றல் வாய்ந்த மொழிகளேயாகும். பெரியோர்கள் தங்கள் சுவானுபவ வாக்குகளை இவ்வண்ணம் தம்மை மறைத்துக்கொண்டு சொல்லுதல் மரபேஆகும்.

## அநுபூதி வாழ்வு

நான்கு வாக்குகளையும் 'பெரியோர் சொன்னமொழி' எனக் கூறியதையடுத்து, இவ்வாக்குகளை நான் நம்பிவாழ்கின்றேன் என சுவாமி கூறியுள்ளார். இவ்வாறு நம்பி வாழ்கிறேன் என அவர் கூறியதும் உபசாரமேயாம். ஏனெனில் சுவாமி,

சிவபெருமான் தன் இணையடி வாய்ச்சுது
பாராதியெல்லாம் பரனே என்ன நேரா
-யுணர்ந்து நிற்குதும் நாமே
என்னைவிட்டு அகலாத இறையவன்
-காண
சகல சம்பத்தும் தந்தான் எங்கள் குரு
-நாதன்

என்றவண்ணம் பலவிடத்தும் சொல்லியிருக்கிறார். ஆதலால் சுவாமி பெரியோர் சொன்ன அம்மொழிகளை வெறும் நம்பிக்கையாகக் கொண்டு வாழ்தவரல்லர். அவர் அம்மொழிகளைச் சுவானுபவமாக உணர்ந்து வாழ்ந்தவராவர்.

## நிறைமொழி

சாமானியர் கூறும் சொற்கள் போன்று எளிமையான சொற்களில் அமைந்த இன் நான்கு மொழி களையும் நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிழந்த மறை மொழி களென நம்புதல் வேண்டும் என் பதை தம் முன்னிலையில் அமர்ந திருக்கும் அன்பர்கள் உளங்கொளளுதற்கோர் உபாயமாகவே சுவாமி 'பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள்' எனவும் 'நான் அதனை நம்பி வாழ்கிறேன்' எனவும் கூறினார் போலும. வேதம், ஆகமம், வேதாந்தம், சித்தாந்தம் எல்லாம் கூறுவதன் பிழிவாகவே மேற்சொன்ன சுவாமியின் சுவானுபவ வாக்குகள் நான்கும் உள்ளன. இந் நான்கு வாக்கியங்களும் உண்மையுணர்ந்து உபசாந்தமாக வாழநாடுவோர்க்குப் போதியனவாம். இவை போதியன என்றுணாத்தற் பொருட்டே இவற்றுக்கும் மேலாக சாத்திரக் குப்பைகளை கிளறத்தேவை யில்லை என்ற பொருளில் 'அதிகம் படிக்க வேண்டியதில்லை' எனச் சுவாமிகூறினார்.

**சிவதொண்டன்**

## சாதனைக்குரிய மறைமொழிகள்

இந் நான்கு மொழிகளும் நிறைமொழிகளாவதுடன், மறைமொழிகளும் ஆகும். மறைமொழிகளாதலால் இவற்றின் உண்மை உள்ளுகும் உள்ளாக மறைந்து கிடக்கின்றது. மறைந்துகிடக்கும் உண்மை சாதனை முதிர முதிர மெல்ல மெல்ல வெளியாகும். கடவுள் ஒருவர் தன்னந்தனிப் பொருளாயுள்ளார் என பதை நாமும் ஏதுமொன்றற்ற தனியனாய் நின்று உணர்ந்தால் மட்டுமே கடவுள் ஒருவர் உள்ளார் என் பதைச் சுவானுபவமாக உணர்ந்து சுகிப்பதாக அமையும். அவ்வாறே பார்ப்பதெல்லாம் சிவமாகவே பார்ததுப பதைப்பற்றிருக்கும் அழகு சாதனை செய்தற்குரிய மொழியே கடவுள் எங்கும் உள்ளார் என்னும் மொழி. கையில் நெல்லிக்கனி போலக் கடவுள் எங்களிடம் உண்டு என்று தெளியும்வரை சாதனை செய்தற்குரிய சாதனை மணியே கடவுள் என்னோடு கூட இருக்கிறார் எனும் நிறைமொழி. இகபரம் இரண்டும் கைக்குள்ளே ஆச்சு எனும் நிலைவரும் வரை எனக்குச் சகல சம்பத்தும் உண்டு என்பது வெறும் பேச்சே.

ஆகவே சுவாமி உத்தரநாளிற் சொன்ன நான்கு எளிமையான உண்மை மொழிகளும், அவை சாதனை செய்யும் சத்துக்களால் மட்டும் உணர்ந்து கொள்ளற்குரிய மறைமொழிகள். சுவாமி தமது எல்லைஇல்லாத கருணைப்பெருக்கால் சுரந்த உபதேச மொழிகள். இவ் உபதேச மொழிகளைச் சாதனையிற் கொண்டு உய்தி கூடுவோமாக. □

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் மத்தி கொட்டடியம் பதி ஸ்ரீஆதிமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நாளை 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும், பி.ப.3 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (உ-8)

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஸ்ரீமூத்த நயினார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ள இவ்விழாவில் தேர், தீர்த்த, திருக்கல்யாண உற்சவங்கள் முறையே எதிர்வரும் 28, 29, 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-10)

## கூட்டுப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

மீசாலை வடக்கு, வேம்பிராய் கலட்டிப்பிள்ளையார் ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பி.ப.4.30 மணிமுதல் 5.30 மணி வரை விசேட கூட்டுப்பிரார்த்தனை இடம்பெறவுள்ளது.

இதில் பங்குபற்றும் மாணவ, மாணவிகளின் தேவாரம் மனனஞ் செயயும் திறமைக்கு ஏற்ப ஒவ்வொரு பூரணை தினத்திலும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (உ-8)

## மரம் நாட்டு விழா

(பருத்தித்துறை)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி புலோலி காந்தியூர் சனசமூக நிலையம் மரம நாட்டு விழாவை அண்மையில் நடாத்தியது. சனசமூக நிலையத தலைவர் எஸ்.சிவரூபன் தலைமையல் நடைபெற்ற இப் மரம நாட்டு வழா விலே பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் ஏ.நடராஜா முதல மரக்கன்றை நாட்டி விழவை ஆரம்பிதது வைத்தார். (உ-52)

## பிரதேச செயலகம் புனரமைப்பு

(மருதங்கேணி)

பளைப்பிரதேச செயலகம் சொந்த இடத்தில் இயங்குவதற்கேற்ற வகையில் கடந்தகால போர் அனர்த்தங்களால் சேதமடைந்த செயலகக் கட்டடங்கள் திருத்தப்படவுள்ளன.

இப்பிரதேச செயலகப்புனரமைபபுக்கு 17 கோடி 80 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

## சலுகைகளை வழங்கத் தயாராகவுள்ளோம்!
# இலங்கையில் முதலீடு செய்ய ஜப்பானியர்கள் முன்வர வேண்டும்
## வர்த்தக வாய்ப்புக் கருத்தரங்கில் பிரதமர்

(கொழும்பு)

'தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையினையடுத்து இந்தியா எம்முடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை மேற்கொண்டுள்ளது. அமெரிக்காவும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நிலையில் ஜப்பானிய முதலீட்டாளர்களும் இலங்கையில் முதலீடு செய்ய முன்வரவேண்டும்'.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம், டோக்கியோ-ஜப்பான் வங்கியியல் சர்வதேச திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இலங்கையின் வர்த்தக வாய்ப்புக்களுக்கான கருத்தரங்கில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், இலங்கைப் பொருளாதாரம் தற்போது வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்ல ஆரம்பிதுள்ளது.

சர்வதேச மட்டத்தில் 'ரயில் என்ஜின் உற்பத்தியில்' ஜப்பானியர்களே விளங்குகின்றனர் என்பதனால் எமது பொருளாதாரம் என்னும் ரயிலில் நீங்களும் எங்களுடன் இணைவதன் முலம் மேலும் எமது நாட்டில் பொருளாதார வளர்சசியை முன்னோக்கிக் கொண்டு செல்லமுடியும்.

இக் கருத்தரங்கினை நான் இலங்கைப் பொருளாதாரம் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பாகவே கருதுகிறேன்.இலங்கை ஜப்பானுடன் பொருளாதார ரீதியில் மட்டுமன்றி சமாதான முயற்சியிலும் உறவு கொண்டுள்ளது.

அதேவேளை, எமது அரசு தனியார்துறை முதலீடுகளை வரவேற்கின்றது. அத்துடன் இலங்கையின் மீள் கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் பொதுத்துறை மற்றும் தனியார்துறையினை மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை இந்துசமுத்திரத்தில் வர்த்தகத்திற்கும் உல்லாசப் பயணத்திற்கும் ஏற்ற இடமாக அமைந்திருபபதால் எமது நாட்டில் முதலீடு செயபவர்கள் அதிக நன்மை அடைவார்கள். அவர்களுக்கு இலங்கை அரசு பூரண ஆதரவையும் பல சலுகைகளையும் வழங்கும் என்றார். (உ-10)

## பேச்சாற்றல் குறைந்தவர்களுக்கு நிபுணர்கள் குழு பயிற்சி, சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

பேச்சாற்றல் குறைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் நிபுணத்துவம் பெற்றவர்கள் அடங்கிய குழுவொன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரவுள்ளது.

எதிர்வரும் 14, 15, 16ஆம் திகதி களில் யாழ்.செயலகத்திற்கு அண்மையில் உள்ள சாந்தியகத்தில் மு.ப 9 மணிமுதல் பி.ப 5.30 மணிவரை மாவட்டததிலுள்ள உளவளத் துணையாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்கவுள்ள இக் குழுவினர், பேச்சாற்றல் குறைந்தவர்களுக்குப் பயிறசிகளையும், சிகிச்சைகளையும் வழங்கவுள்ளனர்.

இக் குழுவினரிடம் பேச்சுத் திறனுக்கான சிகிச்சை பெற விரும்புவோர் யாழ்.போதனா வைத்திய சாலை, அறை இல.30 இல் பதிவுகளை மேற்கொள்ளலாம் என யாழ். உள மருத்துவப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். (உ-8)

## மட்டு-அம்பாறை மாவட்டங்களில் நேற்று பூரண ஹர்த்தால்

(கொழும்பு)

மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இக் ஹர்த்தால் காரணமாக மாவட்டங்களின் வர்த்தக நிலையங்கள் அரச மற்றும் தனியார் அலுவலகங்கள் அரச, தனியார் போக்குவரத்து, படகு சேவைகள் என்பன இடம்பெறவில்லை.

அத்துடன், கிழக்குப் பல்கலைக் கழகம் உட்பட அனைத்து உயர் கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன.

பிரதான வீதிகளில் ஆங்காங்கே ரயர்களும், கொடும்பாவிகளும் எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


தமிழீழ விடுதலைப்புலிகளின் திமிலதீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் சத்தியராஜ் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும் அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் அதிகரித்து வரும் சமாதான விரோத சக்திகளைக் கண்டித்தும் இக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (தி)

# சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய

# இரதோற்சவ சிறப்பு மலர்

## 13.06.2003





## தர்மகர்த்தா சபைத் தலைவரின் ஆசிச் செய்தி

திருமூலராலே சிவபூமி என்று அழைக்கப்பட்ட இலங்கைத் தீவிலே யாழ்ப் பாணமாம் புண்ணிய பூமியில் சுதுவையம்பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கின்ற அம்பாளின் ஆலயத்திலே இன்று இரதோற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இவ்வேளையிலே, எல்லாம் வல்ல அம்பிகை, அடியவருக்கு அருள் பாலித்து இரதத்தில் எழுந்தருளி வந்து கொண்டிருக்கிறாள். அடியவர் செய்கின்ற பாவ வினைகளை அறுத்து அவர்களைப் புண்ணிய வழியில் நெறிப்படுத்தி பேரின்பப் பெருவாழ்வை அளித்துக் கொண்டிருக்கின்றாள். இரதோற்சவமாகிய இந்தப் புண்ணிய தினத்திலே இத்தீவிலே அரும்பியிருக்கும் சமாதானம் மலர்ந்து மணம் பரப்ப வேண்டி அம்பாளை இறைஞ்சுகின்றோம்.

சுபம்

இவ்வண்ணம்
வைத்திய கலாநிதி
ஆ.சிவபாதம்,
தலைவர், சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயம்.

## ஆலயப் பிரதம குருவின் ஆசிச் செய்தி

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியும் தொன்மையும் பெருமையும் மிக்க சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுடைய இரதோற்சவ வைபவம் இன்று வெகு கோலாகலமாகவும் பக்திபூர்வமாகவும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இவ்வேளையில் அம்பிகையினுடைய வரலாற்றினை கூறுவது பொருத்தமாக இருக்கும் என நம்புகிறோம். மதுரையை அழித்த கண்ணகி ஆவேசத்துடன் இங்குவந்து தங்கி தன்னுடைய களைப்பைத் தீர்த்து காட்சி கொடுத்து, மறுநாள முல்லைத்தீவு வற்றாப்பளையில் சென்று தங்கினாள். இங்கு வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரம் கூடிய பௌர்ணமி தினத்தில் தங்கியபடியால் தங்குசங்களை என்னும் நாமம் வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. இதைக்குறித்து தேர்த்தினமான இன்று, அன்றுதொட்டு இன்றுவரையும் அம்பாளினுடைய வெளிவீதியிலே நாலாபுறமும் பொங்கல், சுளகுமடை வைத்து ஆதரித்துவரும் வழக்கம் இருந்து வருகிறது. பௌர்ணமி தினத்தில் அம்பாளினுடைய தீர்த்த உற்சவம் நடைபெறுவது வழக்கம். தேர்த்தினத்தன்றிரவு கண்ணகி அம்பாள் தங்கிக் காட்சி கொடுத்த இடமாகிய தங்குசங்களையில் (தலவிருட்சம்) மடைகள் நடைபெறுவது சிறப்பம்சமாகும். இவ்வாலயத்திற்கு இக்கிராம மக்கள் மட்டுமல்ல அயல்கிராம மக்களும் கூட வந்து அம்பிகை தரிசனம் செய்து தங்களுடைய நேர்த்திகளை பூர்த்திசெய்து கொள்வார்கள். ஆகவே இன்றைய நன்னாளில் நாமெல்லோரும் ஒருமித்து நம்நாட்டில் நலமாகவும், சமாதானமாகவும், சுபீட்சமாகவும் வாழ்வதற்கு அம்பிகையை பிரார்த்தித்து ஆசி கூறுவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வண்ணம்
ஐ.மகேஸ்வரக்குருக்கள்,
சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி.

நந்தா புடவையகம் அன் பான்சி ஹவுஸ்
யாழ் வீதி, மானிப்பாய்.

மோகன் வீடியோ அன் ஸ்ருடியோ
யாழ் வீதி, மானிப்பாய்.

சுந்தர்சன்
சந்தை முன்பாக, மானிப்பாய்.

மயூரா தச்சுத் தொழிற்சாலை
ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

பிறேம் நகை மாடம்
யாழ் வீதி, சந்தையடி, மானிப்பாய்.

சாயி டிஜிற்றல் கொம்
ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
T.P:- 222 3600 5278

நியூ சரஸ்வதி விலாஸ்
சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.

புகழ் கல்வி நிறுவனம்
சுதுமலைச் சந்தி, தாவடி வீதி, மானிப்பாய்.

மயில்வாகனம் பல்பொருள் அங்காடி
சுதுமலை மத்தி, மானிப்பாய்.

ABINAYA MULTI ELECTRONICS
169, Jaffna Road, Manipay.
T.P:- 071 - 381126

THE PRCM PHONE SHOP
ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

VITHUYAN VIDEO CENTER
VAN FOR HIRE
Sankarapillai Road, Manipay.

துர்க்கா மெடிக் கிளினிக்
துர்க்கா தொலைத்தொடர்பு நிலையம்
சுதுமலை மத்தி, மானிப்பாய்.
T.P:- 222 2554

# இஸ்ரேலின் முயற்சிக்கு பலஸ்தீனர் பதிலடி

# தற்கொலைத் தாக்குதலில் 16 பேர் பலி

## சமாதான முயற்சிக்கு குந்தகமென புஷ் கவலை


(ஜெருசலேம்)

ஜெருசலேம் நோக்கிச் சென்ற பேருந்து மீது, பலஸ்தீனத் தற்கொலைப் போராளிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 100 பேர் காயமடைந்துள்ளனர்.


கமாஸ் தீவிரவாத இயக்கத் தலைவர் ஒருவரை கொலை செய்வதற்கு இஸ்ரேல் எடுத்துக் கொண்ட முயற்சிக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக கருதப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற சில நிமிடங்களில் இஸ்ரேலியப் படையினர் நடத்திய பதில் தாக்குதலில் 9 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் முன்வைக்கப்படும் இவ்வேளையில், இத்தகைய தாக்குதல்களும் பதில் தாக்குதல்களும் இடம்பெறுவது கவலைக்குரியது எனத் தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் இத்தகைய துரதிஷ்ட வசமான சம்பவங்கள்



நடைபெறுவதை உடன் நிறுத்த சகல நாடுகளும் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். (உ-9)



அமெரிக்காவில் இடாகோ நகரில் குளோனிங் முறையில் பிறந்த குதிரைக் குட்டியுடன் அதனைப் பெற்றெடுத்த இடாகோ ரோஸ் குதிரையைப் படத்தில் காணலாம்.

### போர்த்துக்கல்லில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# மும்பை தொடர் குண்டுவெடிப்பின் முக்கிய சூத்திரதாரி நாடு கடத்தப்படுவார்

(புதுடில்லி)



250ற்கும்மேற்பட்டவர்களின் உயிரைக்குடித்த மும்பைத் தொடர குண்டுவெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரியான அபுசலீம் விரைவில் நாடுகடத்தப்படுவார் என்று இந்திய மத்திய புலனாய்வுக் கழகம் அறிவித்துள்ளது.

மும்பைத் தொடர் குண்டு வெடிப்புச் சம்பவம் உட்பட பல்வேறு வழக்குகளுடன் சம்பந்தப்பட்ட அபுசலீம் சர்வதேசக் காவல் துறையினரின் உதவியுடன் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் காதலி மோனிகா பேடியுடன் கைது செய்யப்பட்டார்.

தற்போது போர்த்துக்கல் சிறையில் இருக்கும் அபுசலீமையும் அவனது காதலியையும் மிக விரைவில் இந்தியாவிற்கு கொண்டு செல்வதற்கான அனுமதியினை போர்த்துக்கல் நீதிமன்றம் வழங்கவுள்ளது.

இதேவேளை, அபுசலீமின் காதலி மோனிகா பேடி தான் ஒரு பெண் என்ற வகையில் வழக்கு விசாரணையின் போது தன்னைத் துன்புறுத்த மாட்டார்கள் என்பதற்கு என்ன ஆதாரமுள்ளது? என்றும் தனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால் அதனை எதிர்த்து அனுப்பும் கருணை மனுவினை இந்தியக் குடியரசுத் தலைவர் நிராகரிக்க மாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தியா என்பது ஒரு ஜனநாயக நாடு. அதில் சாதி, மதம், இனம், பால் ஆகியவற்றின் அடிப்படையில் எவரையும் இனம் பிரித்து நடத்துவதில்லை.

அதேசமயம் அபுசலீமிற்கோ, மோனிகா பேடிக்கோ மரண தண்டனை விதிக்கப்படமாட்டாதென மத்திய அமைச்சரவை அறிவித்து விட்டது. மத்திய அமைச்சரவையின் இந்த அறிவிப்புக்கு குடியரசுத் தலைவர் என்றும் கட்டுப்படுவார் என்று இதற்குப் பதிலளிக்கும் வகையில் மத்திய புலனாய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-2)

# அமெரிக்காவுடன் இணைய இந்தியாவுக்கு அதிகவாய்ப்பு

(நியூயோர்க்)

ஈராக்கின் புனர்நிர்மாணப் பணிகளில் அமெரிக்காவுடன் இணைந்து செயற்படுவதற்கு இந்தியாவிற்கு அதிகளவிலான வாய்ப்புக்கள் உருவாகியிருப்பதாக இந்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சர் அருண் ஜேட்லி கூறியுள்ளார்.

நியூயோர்க்கில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆசிய சமூகத்தின் வர்த்தக தொழிற்துறை அமைச்சர்களின் கூட்டமொன்றில் பேசுகையிலேயே ஜேட்லி இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அவர், ஈராக் போருக்கு முன்னர் அங்கு அதிக கட்டுமானத் திட்டங்களை நிறைவேற்றிய அனுபவம் இந்தியாவிற்கு உள்ளது. அதில் கட்டிமுடிக்கப்பட்ட சில பணிகளுக்கான தொகை இன்னமும் பெறப்படாமல் இருக்கின்றது.

இந்த வகையில் ஈராக்கில் மீண்டும் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இந்தியாவிற்கு அதிகரித்துள்ளன என்று கூறியுள்ளார்.

இதேவேளை,ஈராக்கில் அமைதி காக்கும் பணிகளில் இந்தியத் துருப்புக்களை ஈடுபடுத்துமாறு அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளமை தொடர்பில் இந்திய அரசு ஆலோசனை நடத்திவருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ-2)



வாஷிங்டனில் வெள்ளை மாளிகையில் ரோஜாத் தோட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இசை நிகழ்ச்சியொன்றில் அங்குள்ள அநாதைச் சிறுவர்களுடன் அமெரிக்க அதிபர் புஷ்.

### வறியவர்களுக்கு உதவுவதில்

# ஐரோ.ஆணைக்குழு அசிரத்தை

## சிறுவர் தொண்டு நிறுவனம் குற்றச்சாட்டு

(அடிஸ்அபாபா)

வறுமையின் கொடுமையில் சிக்கியுள்ள எதியோப்பிய மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதில் ஐரோப்பிய ஆணைக் குழு அசிரத்தையுடன் செயற்பட்டு வருவதாக பிரிட்டனிலுள்ள சிறுவர்களைப் பாதுகாப்போம் என்ற உதவி வழங்கும் நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது.

எதியோப்பியாவில் இலட்சக் கணக்கான மக்கள் வறுமையின் பிடிக்குள் சிக்கியுள்ளனர். இவர்களுக்கு உடனடியாக உணவுப் பொருட்களை வழங்கவேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டுள்ளது.

1983 - 84ஆம் ஆண்டு காலப் பகுதியில் எதியோப்பியாவில் ஏற்பட்ட கடும் வறுமை மற்றும் வறட்சி காரணமாக ஆயிரக் கணக்கான குழந்தைகள் உட்பட பல இலட்சம் மக்கள் உயிரிழந்தனர்.

இவ்வாறான உயிரிழப்புக்கள் ஏற்படுவதற்கு உதவிவழங்கும் நிறுவனங்களின் அக்கறையின்மையே முதல் காரணமாகும்.

இந்த விடயத்தில் உடனடி நடவடிக்கை ஐரோப்பிய ஆணைக் குழு எடுக்க வேண்டும் என மேற்படி நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது. (உ-9)

# இந்தியா – பாக். இடையிலான பிணக்கைப் பேசித் தீர்க்கலாம்

## கோபி அனான் நம்பிக்கை

(நியுயோர்க்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலுள்ள பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துவிட முடியுமென்று ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலர் கோபி அனான் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பிரேஸிலிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட பின்னர் நாடு திரும்பும் வழியில் கடந்த செவ்வாய்க்கிழமை நியுயோர்க் சென்றிருந்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்தசிங்ஹா அங்கு கோபி அனானை சந்தித்த போதே இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

40 நிமிடங்கள் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது இந்திய பாகிஸ்தான் இடையிலான சமாதானத்திற்கான இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் எடுத்து வரும் முயற்சிகளுக்கு தனது பாராட்டினை அனான் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, ஈராக்குடனான எண்ணெய்க்கான உணவுத் திட்டம் நீடிக்கப்படவேண்டியதன் அவசியத்தை ஜஸ்வந்சிங்ஹா அனானிற்கு வலியுறுத்தியிருந்தார்.

ஈராக்கின் எண்ணெய்க்கான உணவுத் திட்டத்தினை மேற்கொண்டுள்ள நாடுகளில் இந்தியாவும் முக்கியமானதொரு நாடென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-2)



கிணற்றுக்குள் விழுந்த வாளியை எடுக்க முயன்ற அண்ணன் தம்பி உட்பட 3 பேர் விஷ வாயு தாக்கி உயிரிழந்தனர். பயன்படுத்தாமல் இருந்த கிணற்றினுள் விழுந்த வாளியை எடுக்க இறங்கிய ஒருவர் விஷவாயு தாக்கி மயக்கமடைந்ததைத் தொடர்ந்து அவரைக் காப்பாற்ற இறங்கிய இருவருமே பரிதாபமாக உயிரிழந்தனர்.

### அமெரிக்காவால் தேடப்பட்ட

# மேலும் இருவர் ஈராக்கில் கைது

(பக்தாத்)

அமெரிக்காவினால் தேடப்பட்டு வருவோர் பட்டியலிலுள்ள மேலும் 2 பேரை அமெரிக்கப்படையினர் ஈராக்கில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

இத்தகவலை அமெரிக்க புலனாய்வுத்துறை அமைப்பு அதன் இணையத் தளத்தினூடாக வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட லத்தீப் சோயிப், பிரிகேடியர் ஹுசைன் ஆகிய தேடப்பட்டு வருவோர் பட்டியலில் 18வது மற்றும் 53வது இடங்களிலுள்ளவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட இந்த இரு நபர்கள் குறித்த மேலதிக விபரங்கள் எதையும் அமெரிக்கப் புலனாய்வுத் துறையினர் வெளியிடவில்லை. (உ-2)



ஹொங்கொங்கிலுள்ள மேடம் துசாத் அருங்காட்சியகத்தில் தன்னைப் போலவே உருவாக்கப்பட்டுள்ள மெழுகுப் பொம்மையுடன் பிரபல பொப் பாடகி கெல்லி சென் (வலது)

*தவமறைந்து அல்லவை செய்தல் புதல் மறைந்து*
*வேடன் புள்சிமிழ்த் தற்று*
*– குறள்*

வலம்புரி

## சிறுவர் துஷ்பிரயோகம்

யாழ். குடாநாட்டில் தற்போது வெளியாகிக் கொண்டிருக்கும் கலாசாரச் சீரழிவுச் செய்திகளைக் கேட்கும் போது யாழ்ப்பாணத்துக் கந்த புராண கலாசாரம், அரை நிர்வாணக் கலாசாரமாக மாறி வருவது புலனாகிறது. இளைய சந்ததியின் முறை தவறிய நடத்தைகள் இறுக்கமான கலாசார பின்னணியுடைய யாழ்ப்பாண சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இளைஞர்களின் ஒழுக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், கலாசார சீரழிவை வீதிக்குக் கொண்டுவந்துவிட்டது. சந்திகளில் கூடிநின்று சேட்டை விடும் இளைஞர்கள், எதிர்கால இலக்கின்றிச் செயற்படுகின்றனர். இத்தகைய இளைஞர்களின் நடவடிக்கை பராய மடையாத பெண்பிள்ளைகளையும் தவறான பாதைவழிக்கு இட்டுச் செல்கிறது. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டுமென்ற தத்துவத்தைத் தந்த தமிழ்ப் பண்பாட்டில் தன்னை உணர்ந்து கொள்ளாத சிறு வயதில் தவறான பாதைவழி காட்டப்படுமாயின் அந்தச் சிறுவர்கள் எதிர்காலத்தில் மிக மோசமானவர்களாக, கலாசார சீரழிவின் போதகர்களாக விளங்குவார்கள் என்பது திண்ணம்.

இந்நிலையில் கட்டிளமைப் பருவத்தில் உள்ள இளைஞர்கள் சமூக சிந்தனையின்றி தமது அற்ப சுகத்திற்காக சிறுவர்களைத் தவறான பாதைக்கு கூட்டிச் செல்வது மிகப்பெரும் பாதகச் செயலாகும். எனவே சந்திகளில் கூடி நின்று விரசத்தை வெளிப்படுத்தும் இளைஞர் கூட்டம் பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும். தியாகம் விளைந்த மண்ணில் வாழ்கிறோம் என்ற உணர்வை இளம் சமூகம் ஒருபோதும் மறந்துவிடல் ஆகாது.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற குறிப்பிட்ட சில சிறுவர் நிலையங்களில் இடம்பெற்றதாக வெளிவரும் பாலியல் துஷ்பிரயோகம் மிகப்பெரும் கோரச்செயலாகும். ஏழைச் சிறார்களைப் பராமரிக்கும் நிலையங்கள் பொறுப்போடு நடந்துகொள்வது அவசியமாகும். சிறுவர்களைப் பராமரிக்கிறோம் என்ற பெயருக்கும், புகழுக்குமாக நிலையங்களை ஸ்தாபிப்பதும், பாதுகாப்பற்ற சூழ்நிலையில் சிறுவர்களைப் பராமரிப்பதும் மிகப்பெரும் தவறாகும்.

எனவே, இதுவிடயத்தில் இளம்சமூகம் மிக விழிப்பாக செயற்பட்டால், ஏழைச் சிறுவர்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பதோடு, ஏழைகள் என்ற பெயரைவைத்து அச்சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய் செய்பவர்களையும் அம்பலப் படுத்த முடியும்.

# பிரதமரின் டோக்கியோ உரை குறித்து ஆராய கதிர்காமர் தலைமையில் குழு

## ஜனாதிபதி சந்திரிகா நியமிப்பு


(கொழும்பு)



டோக்கியோ மாநாட்டில் கடந்த 9,10ஆம் திகதிகளில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரை தொடர்பாக ஆராய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 7 பேர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயற்குழுக் கூட்டத்திலேயே இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் தலைமை தாங்குகின்ற இக்குழுவில் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பொதுச் செயலாளர் மைத்திரி பாலசிறிசேன மற்றும் பொது ஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த டீ.எம்.ஜயவர்த்தன, பாக்ர்திஸ்ஸ வித்தான, டீயுகுணசேகர ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.



பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்குழுக் கூட்டம் மீண்டும் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (உ-10)

# அரச அச்சகருக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனு

(கொழும்பு)

அரசாங்க அச்சகத்தின் ஊழியர்கள் அரசாங்க அச்சகருக்கு எதிராக அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளனர்.

மே மாதம் 9ஆம் திகதி அரசாங்க அச்சகத்தை மூடி சீல் வைத்தமையானது நியாயமானதும் சட்டபூர்வமானதுமான தமது தொழில் வாய்ப்பை மறுத்த செயலாகும் என அவர்கள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

ரஜயே முத்திரனாலய சுரக்கீமே தொழிற்சங்கத்தினதும், அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினதும் சார்பில் டீ.என்.பதிராஜ மனுத் தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகளாக அரசாங்க அச்சக நெவில் நாணயக்கார, பொறளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

வர்த்தமானி அறிவித்தலை வெளியிடக்கூடாது என்று அரசாங்க அச்சகர் மீது அரசியல் வாதிகள் அழுத்தம் பிரயோகித்தனர். அவர் அச் சமயங்களில் அவர்களுடன் ஒத்து செயற்பட்டவர். அச்சகம் மீதான தாக்குதலுக்கும் கூட ஒத்துச் செயற்பட்டார். அரசியல் அழுத்தம் காரணமாகவே சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரியிருந்தார்.

நிர்வாக ரீதியானதும் நிறைவேற்று அதிகார ரீதியானதுமான அதிகாரங்கள் பிரயோகிக்காது விடப்பட்டமை நமது அடிப்படை உரிமைகளை மீறுவதற்கு வழி வகுத்திருக்கிறது என்று அவர் தமது மனுவில் தெரிவித்திருந்தார். (உ)

## சின்னமுத்து தடுப்பு மருந்தேற்றல்

### ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

(சுதுமலை)

யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான சின்னமுத்துத் தடுப்பூசி மருந்தேற்றல் நடவடிக்கைக்குத் தேவையான தடுப்பு மருந்துகள், உபகரணங்கள் மற்றும் ஆவணங்கள் என்பன சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கும் சுகாதார திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜூலை, ஓகஸ்ற் மாதங்களில் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் பயிலும் 10-15 வயதுடைய மாணவர்களுக்கு சின்னமுத்துத் தடுப்பு மருந்தேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இத்தடுப்பு மருந்தேற்றல் நிகழ்வின் பொருட்டு பாடசாலைகளுக்கு வருகை தரும் சுகாதார உத்தியோகத்தர்களிற்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்கி சகல 10-15 வயதுக்குட்பட்ட மாணவர்களிற்கும் குறிப்பிட்ட தினத்தில் தடுப்பு மருந்து பெறுவதற்கான வழிவகைகளை பாடசாலை அதிபர்கள், வகுப் பாசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரை வழங்கி உதவும் படி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் சகல அதிபர்களிற்கும் கடிதமூலம் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-252)

# புலிகளின் கோரிக்கை தொடர்பில் பிரதமர் உயர்மட்ட மந்திராலோசனை?

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு மீண்டும் அழைப்பது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உயர்மட்ட மந்திராலோசனை ஒன்றினை விரைந்து நடத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த உயர்மட்டத் தலைவர்களை அழைத்து வடக்கு-கிழக்கு உட்பட இலங்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி அபிவிருத்தி நடவடிக்கைகள், விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கைக்கு நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படாமலும் புலிகளின் மனம் கோணாதவகையிலும் சரியான தீர்வொன்றினைக் கண்டு நடைமுறைப்படுத்தல் வெளிநாட்டு உதவிகளை அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்துதல் ஆகியன குறிதும் பிரதமர் விரிவாக ஆராயவுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, பிரதமர் ரணில் இலங்கைக்கு உதவிவழங்கும் டோக்கியோ மாநாட்டை முடித்துக் கொண்டு நேற்று நாடுதிரும்பியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதமிருக்க,

இலங்கைக்கு நிதியுதவியளித்த நாடுகள், அரசு-புலிகள் இடையிலான பேச்சுக்கள் தங்குதடையின்றித் தொடரவேண்டியதன் அவசியப்பாட்டினை வலியுறுத்தியதுடன் அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே நிதியுதவியனை அளித்துள்ளன.

அததுடன், அபிவிருத்தி நடவடிக்கைகளை சரிவர மேற்கொள்வதாயின் வடக்கு-கிழக்கில் தனியான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டியுள்ளன. (உ)

## தினசரி தியானம்

### புதுமையான உலகம்

சிலவேளைகளில் கோப உணர்ச்சியின்றிக் கோபம் கொண்டிருப்பதாகக் காட்டவேண்டியிருக்கும். இது ஒரு புதுமையான உலகம். அன்பும், கனிவும் மட்டும் கொண்டு வாழ்ந்துவிடமுடியாது. தேள்கொட்டுவதை விட்டுவிட்டால், மக்கள் அதைப் பிள்ளைப் பூச்சியாக எண்ணுவார்கள். சில சமயம் புறத்தே வேகமாகவும், மூர்க்கமாகவும் இருக்க வேண்டும். சீற்றம் காட்டுங்கள். பிறர்க்குத் தொல்லை தராதீர்கள்.

சுவாமி சிவானந்தர்

## மின்கம்பங்களால் இடையூறு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் முன்பாக போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நீண்ட நாட்களாக காணப்பட்ட மின்கம்பமொன்றை இலங்கை வங்கி ஊழியர்கள் கடந்த செவ்வாயன்று அப்புறப்படுத்தினர்.

இதேவேளை சத்திரத்துச் சந்தி கே.கே.எஸ் வீதிக்குத் திரும்பும் இடத்தில் மற்றொரு மின்கம்பம் முறிந்த நிலையில் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதுடன் இதனை எவரும் அப்புறப்படுத்த முன்வரவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## இத்தாலியில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

இத்தாலியில் தொழில் வாய்ப்பினைப் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட அனைவரிற்கும் விரைவில் அந்நாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்படும் என தொழில், வேலைவாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரங்க தெரிவித்துள்ளார்.

இத்தாலிய அரசாங்கம் இவர்களுக்கான விசாக்களை வழங்கி வருகின்ற போதும் அங்குள்ள தனியார் நிறுவனங்களே இவர்களுக்கு வேலைகளைப் பெற்றுக் கொடுக்கின்றன.

எனவே இணையத் தளத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட அனைவரையும் இத்தாலிக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

## திருக்கேதீஸ்வரத்தில் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வர ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் ஜூலை மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதேவேளை, இவ்வாலயம் 1991ஆம் ஆண்டில் இருந்து பூஜைகள் எதுவும் நடைபெறாது இருந்ததுடன் இவ்வாலயத்தில் படையினர் நிலை கொண்டிருந்தமையினால் இவ் ஆலயத்திற்கு மக்கள் வழிபடச் செல்வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையில் இவ்விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்ததை அடுத்து படையினர் அங்கிருந்து வெளியேறியதுடன் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## ஆயுத முனையில் கொள்ளை

(வவுனியா)

வவுனியாவில் உக்கிளான் குளத்தில் உள்ள வீடொன்றில் கடந்த சனிக்கிழமை ஆயுதமுனையில் கொள்ளைச்சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. மேற்படி இடத்தில் வசிக்கும் கதிர்காமர் சதாசிவம் என்பவருடைய வீட்டினிலேயே இச்சம்பவம் இடம் பெற்றது.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, முகமூடி அணிந்து வந்த இருவர் துப்பாக்கியுடன் வீட்டினுள் புகுந்து அங்கிருந்த கணவனையும் மனைவியையும் துப்பாக்கிமுனையில் மிரட்டி 20ஆயிரம்ரூபா பணத்தையும் ஒருலட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர். இதேவேளை, இத்திருடர்கோஷ்டி வீட்டின் முன்நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் அபகரித்துச் சென்றுள்ளனர். (உ-13)

# மலையக மக்களின் நிலைமையை சர்வதேசமும் அறிய வைக்க முயற்சி

(கொழும்பு)

இந்திய வம்சாவழி மலையக மக்களின் அரசியல் சமூகப் பிரச்சினைகள் சர்வதேச கவனத்தை ஈர்ப்பதற்கு வழி செய்யும் விதத்திலான அமைப்பொன்றினை அமைச்சர் சந்திரசேகரன் டென்மார்க்கில் ஆரம்பித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வும் அதற்கான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்ற இக்கால கட்டத்தில் மலையக மக்களின் அரசியல் உரிமைகள் பற்றிய தேவைகளை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் செல்வது அத்தியாவசியமான அரசியல் கடமையாகும்.

இதன் காரணமாகவே தற்போது டென்மார்க்கில் வசிக்கும் புலம்பெயர்ந்தவர்களின் ஆதரவுடன் இந்த அமைப்பினை ஆரம்பித்துள்ளோம் என்று அமைச்சர் சந்திரசேகரன் இதுகுறித்து எம்மிடம் கருத்துத் தெரிவித்தார்.

டென்மார்க் தமிழ் இலக்கிய மன்றத்தின் தலைவராகிய தர்மகுலசேகரம் மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் செயலாளர் நாயகம் பி.ஏ.காதர் ஆகியோர் இந்த அமைப்பின் இணைப்பாளர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ)

## இடைக்கால...

அங்கம் வகிக்கும் பிரதான எதிர்க்கட்சி யான பொதுஜன ஐக்கிய முன்னணி உட்பட அனைத்து அரசியல் கட்சி தலைவர்களையும் சந்தித்து இடைக் கால நிர்வாக சபை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இடைக்கால நிர்வாகக் கட்ட மைப்பு தொடர்பாக டோக்கியோ மாநாட்டில் வைத்து பிரதமரால் வெளியிடப்பட்ட அறிவிப்பையும் விடு தலைப்புலிகள் நிராகரித்துள்ளமை யால் கடந்த 15 மாதங்களாக இரு தரப்பினருக்கும் இடையே நடை பெற்ற ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தை களும் விழலுக்கிறைத்த நீராகிவிடக் கூடாது என்பதற்காக பிரதமர் சர்வ கட்சி மாநாட்டை கூட்டும் முயற்சி யில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

சர்வகட்சி மாநாட்டை கூட்டும் பிரதமரின் முயற்சி விடுதலைப்புலி கள் - அரசு ஆகிய இரு தரப்பினதும் உறவில் மேலும் விரிசல் ஏற்பட லாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.(வ)

## துப்பாக்கிரவை வெடித்து சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நிலத்தில் கிடந்த துப்பாக்கிரவை ஒன்றை கையிலெடுத்து விளையா டியபோது அது வெடித்ததில் சிறுவ னொருவன் படுகாயம் அடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

பாடசாலை முடிந்து வீடு திரும் பிக் கொண்டிருந்த போது ஆரிய குளச் சந்திப்பகுதியில் கிடந்த துப் பாக்கிரவையை எடுத்து இரும்புக் கம்பி ஒன்றினால் அடித்த போது அது வெடித்ததாலேயே இவ் அனர் தம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது ஸ்ரான்லி வீதியில் வசிக்கும் ஆர்.ரஞ்சித் குமார் (வயது-10) என்ற சிறுவனே காயமடைந்தவராவார். (ந-4)

## தமிழ்த்தினப் போட்டி

(அளவெட்டி)

தெல்லிப்பளை கல்விக் கோட்ட பாடசாலைக்களுக்கிடையிலான தமிழ் மொழித் தினப் போட்டிகள் இன்று முதல் நாளை மறுதினம் வரை மல் லாகம் மகாவித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது. (ந-3,83)

## தங்கச்சங்கிலி திருட்டு

(தம்பசிட்டி)

ஆலயபூசைகளை முடித்துக் கொண்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்த பூசகரின் 6 பவுண் தங்கச் சங்கிலி திருடரினால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த வாரம் துன் னாலை மேற்கில் இடம் பெற்றுள்ளது.

தக்குச்சம்பதி வைரவர் கோவில் பூச கரான பிரம்மஸ்ரீ அ.பிரேமச்சந்திரக் குருக்களின் தங்கச் சங்கிலியே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(ந-45)

## கண்காணிப்புக்...

யோகதர்கள் கடத்தப்படுவது குறித் தும் இச்சந்திப்பில் கலந்துரையா டப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண் மைக்காலமாக இடம்பெற்று வந்த ஆட்கடத்தல் மற்றும் கொலைகள் தொடர்பாக மட்டக்களப்பு ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு சென்று அவர்கள் செய்த முறைப்பாடுகள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட யுத்தநிறுத் தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மௌலி கிங்ஸ்ரன் விசாரித்துள் ளார். (வ)

## புளொட்..

யாளம் காணப்பட்டுள்ளார்.

இவர்கள் முச்சக்கர வண்டியை 140,000 ரூபாவிற்கு ஊறுகொட வத்தையிலுள்ள ஒருவரிடமிருந்து விலைக்கு கொள்வனவு செய்துள் ளனர். அதன் உரிமையாளரே முச்சக் கர வண்டியை வைத்துக்கொள்ள லாமென்றும் அதேவேளை, தமக்கு தேவைப்படும் போதெல்லாம் சாரதி யுடன் தம்மிடம் தரப்படவேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்து கொண் டிருந்ததாகவும் விசாரணைகளிலி ருந்து தெரியவந்துள்ளது. சீ.ஐ.டீ பொலிஸார் தொடர்ந்து விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்(ந)

## வரதர்...

யில் அனுமதித்தனர்.

சம்பவ இடத்திலிருந்து வாள் ஒன்றையும், கத்தி ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

காங்கேசன்துறையை சொந்த இடமாகக் கொண்ட இவர் அளவெ டியில் வசித்து வந்ததாகவும் அண் மையிலேயே கொழும்பிலிருந்து யாழ்ப் பாணம் திரும்பியதாகவும் கூறப் படுகிறது. (த-12)


**தேவை**

யாழ். நகரில் இயங்கும் தனியார் கல்வி நிலையத் திற்கு பெண் இலிகிதர் தேவை. யாழ் மாநகர சபை எல்லைக் குள் வசிப்பவர்களுக்கு முன் னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு ☞

விளம்பர இலக்கம் - 7155

மே/பா வலம்புரி

(7155)



**புதுக்கடை திறப்பு விழா அழைப்பு**



**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்**

இல:- 336, 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-2223328

எம்மால் நாளை (14.6.2003) சனிக்கிழமை, காலை 7.20 மணியளவில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மொத்த, சில்லறை விற்பனை நிலையத்தை **கௌரவ இந்து கலாசார அமைச்சர் திரு. தி. மகேஸ்வரன் அவர்களால்** திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களிற்கு அன்புடன் அறியத்தருகிறோம்.

சில்லறை வாடிக்கையாளர்களின் நலன் கருதி புதுப்பொலிவுடனும், நவீன வசதிகளுடனும் நல்ல தரமான பொருள்களை விரும்பிய அளவுகளில் பொதி செய்யப்பட்ட பக்கட்டுகளில், மிகக்குறைந்த விலையில், விரைவாக பெற்றுக் கொள்ளலாம் என்பதை வாடிக்கையாளர் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

இங்ஙனம்.

உரிமையாளரும், ஊழியர்களும்

(7140)



இன்று தேரேறிவரும் கொக்குவில்
ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின்
அருள் வேண்டி நிற்கிறோம்



**எரிக்கணேஸ்**

பல், மூக்குக் கண்ணாடி அகம்

இல.91 கே.கே.எஸ். வீதி கொக்குவில்

(C/6314)



**யாழ் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினர் நடாத்தும்**

**"வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்களிப்பு"**
**மாதாந்த துறைசார் கருத்தரங்கு**

**இடம்** : கம்பன் கழக மண்டபம், நல்லூர்
**தலைவர்**:பிரம்ம குமாரி லேகா
**காலம்** : நாளை (14.06.2003) சனிக்கிழமை மு.ப. 9.30 மணி
**தொழில் துறை**: கல்வித்துறை

சிறப்புச் சொற்பொழிவு வழங்குவோர்

திரு. கோ. சி. வேலாயுதம்
(முன்னாள் கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணம்)

பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்)

பிரம்ம குமாரி இரஞ்சி
(பொறுப்பாளர், இராஜயோக நிலையம், பம்பலப்பிட்டி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

— பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம்

(C/6280)



பாலைவனச் சோலை ஊழியம் நடத்தும்

# இயேசுவின் இன்பப் பெருவிழா

| இடம் | திகதி | நேரம் |
|---|---|---|
| மானிப்பாய் செல்லமுத்து மைதானம் | ஆனி (ஜுன்) மாதம் 12,13,14,15 | பிற்பகல் 4.30 மணி |



தேவ செய்தியாளர்

சகோதரி **பத்மா முதலியார்**

(சென்னை, [illegible] இந்தியா)

பாவம், வியாதி, பில்லிசூனியம், கடன்பாரம், இவைகளில் இருந்து உடனே விடுதலைபெற குடும்பமாக வாருங்கள்
கூட்ட முடிவில் ஜெப எண்ணெய் இலவசமாய் வழங்கப்படும்.

சிறப்புப் பாடல்கள்:
சகோ. ஜான்ஜேபேஸ் & குழுவினர்

இயேசு இன்றும் அற்புதம் செய்கிறார்

அனுமதி இலவசம்!!

குறிப்பு: ஆனி(ஜுன்) மாதம் 13,14காலை 9.30மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் ஊழியர்கள் விசுவாசிகளுக்கான வேதபடிப்பு நடைபெறும்.

தொடர்பு: யாழ்குடா ஊழியர் ஐக்கியம்

போன்:222-3653,222-2930,222-3286

(c/6269)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.